பக்கங்கள் எட்டு:
விலை ரூபா 5-00

Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 10 வியாழக்கிழமை 24-05-2001 தொலைபேசி: 3378 ஒலி: 156

யாழ்ப்பாணம்

அசல் 22 கரட் த
நகைகளுக்கு யாழ் நக
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி.
176/1, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.
(கி-2014)

## ● கடற்படை வாகன அணி மீது
# திருமலையில் கண்ணிவெடி
# 19 கடற்படையினர் பலி!

### 14 பேர் காயம்; பஸ் வண்டி சேதம்

(நமதுநிருபர்)

திருகோணமலை ஹபரணை வீதியில் தம்பலகாமம்என்னும் இடத்தில் இடம்பெற்ற நிலக்கண்ணி வெடியில் பஸ்வண்டியில்பிரயாணம செய்த 14கடற் படையினர் உடல் சிதறிப் பலியாகினர். 17கடற் படையினர் படுகாயமடைந்தனர். காயமடைந்த 17பேரில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட பின்னர் ஐவர் அங்கு மரணமாகியுள்ளனர்.

கண்ணிவெடிச் சம்பவத்தை அடுத்து தம்பலகாமம் பகுதியில் பதற்றம் நிலவுகிறது.

திருகோணமலைக் கடற் படைத்தளத்தில் இருந்து நேற்றுக் காலை 9.45 மணியளவில் கொழும்பு நோக்கி சென்றுகொண்டிருந்த கடற் படைத் தொடர் வாகன அணி ஒன்று திருமலை ஹபரண வீதியில் சென்றுகொண்டிருந்த சமயம் 10-30 மணியளவில் மறைத்து வைத்திருந்த கண்ணிவெடி வெடித்ததில் கடற்படையினர் பிரயாணம் செய்த பஸ்வண்டி பலத்த சேதத்திற்குள்ளான

(8ம் பக்கம் பார்க்க)

### முக்கிய இரண்டு கூட்டங்கள்

(கொழும்பு)

அரசாங்கத்தின் இருமுக்கிய கூட்டங்கள இன்று கொழும்பில் ஜனாதிபதிசந்திரிக தலைமையில் நடைபெறவுள்ளது.

பொது ஜனஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் இன்று மாலை 5மணிக்கு அமைச்சரவைக் கூட்டம்7மணிக்கும் நடை பெறவுள்ளது.

இவ்விரு கூட்டங்களிலும் விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தையை முன்னெடுத்து

(8ம் பக்கம் பார்க்க)

### ராவய அலுவலகம் மீது குண்டுத் தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பிலிருநது வெளிவரும் ராவய பத்திரிகை அலுவலகம் மீது நேற்று மாலை இனந்தெரியாத குழுவொன்றினால் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கொழும்பு மகரகம பகுதியில் இயங்கும் மேற்படி பத்திரிகைக்காரியாலயம் மீதான குண்டுத் தாக்குதலினால் உயிருக்கோ உடமைகளுக்கோ சேதம் ஏற்படவில்லை.

அரசுக்கு எதிராக செய்திகளை வெளியிடும் இப் பத்திரிகை மீதான தாக்குதல் சம்பவம் பற்றி பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பத்திரிகையின ஆசிரியர் விக்டர் ஐவன் சம்பவம் பற்றிக் கருத்துத்தெரிவிக்கையில்எமது கரங்களைக் கட்டிப்போட்டு எம்மைமிரட்டுவதற்காக மேற் கொள்ளபபட்ட தாக்குதலே

[8 ஆம் பக்கம் பார்க்க]

### யாழ் மாநகரசபையின்
## குடும்பநல சேவையாளர்கள் மீண்டும் கடமைக்குத் திரும்புவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் குடும்ப நலசேவையாளர்கள் 36 பேரும் மீண்டும் கடமைக்குத் திரும்புவதெனநேற்றைய தினம் முடிவுசெய்துள்ளனர்.

இம்முடிவை அடுத்து இது தொடர்பான சட்டம் நேற்று யாழ் மாநகர சபையில் முதல்வர் என். ரவிராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் புதிய ஆணையாளர் இராமலிங்கம் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் குடும்பநல சேவையாளர்களின் சார்பில் செயற்பாட்டுக் குழுப் பிரதிநிதிகள் பங்கு

(8ம் பக்கம் பார்க்க)

### புலிகள் பிரதிநிதிகள் அமெரிக்கா விரைவு?

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் அவசர அவசரமாக நேற்று அமெரிக்கா சென்றுள்ளதாக ஏ. எப். பி. செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

நோர்வேயின் சிறப்புப்பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் அமெரிக்காவில் தங்கியுள்ள இவ்வேளையில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் அமெரிக்கா சென்றிருப்பது இலங்கையின் சமாதான முயற்சியில் பாரிய திருப்பத்தை ஏற்படுத்தும் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(வ)

### புலிகள் தாக்குதல்

மட்டக்களப்பு மூதூர்பகுதியிலுள்ள ராலகுடிக் கிராமத்திலுள்ளபொலிஸ்காவலரண் மீது,நேற்றுப்பிற்பகல் 2.00மணியளவில் விடுதலைப் புலி

### விமானத்தில் கோளாறு பயணம் தாமதித்தது!

### அகில இலங்கை
## சைவசமய விவகாரக்குழு நேற்று அங்குரார்ப்பணம்!

நல்லைக்குமரன் மலர் வெளியிடப்படும்

அகில இலங்கை சைவ சமய ணப்படுத்தவேண்டிய

# பயணம் தாமதித்தது!

## இன்று மூன்றுசேவை இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

பலாலியிலிருந்து நேற்றய தினம் புறப்படஇருந்தமுதலாவது பயணிகள் விமானத்தில் ஏற்பட்ட இயந்திக் கோளாறு காரணமாக தாமதித்த விமானம் இரவு 8மணி யளவிலேயே பலாலியிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்டது.

இதனால் இரண்டாவது விமானசேவை இடம்பெறவில்லை இதேவேளைஇன்று மூன்றுவிமானசேவை இடம் பெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது. (ந)

ணியளவில் விடுதலைப் புலிகள்தாக்குதல் நடாத்தியுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இச் சம்பவத்தை அடுத்து மூதூர் பகுதியில் சுமார்அரை மணிநேரமாக துப்பாக்கிச் சூட்டுச்சத்தமும் மோட்டார் குண்டுச்சத்தமும் அப்பகுதியைப்பதட்டத்திற்கு ள்ளாகியுள்ளது.

மேற்படி தாக்குதலை விடுதலைப்புலிகள் மாட்டுவண்டியில் வந்துமேற்கொண்டதாக மூதூர் பொலிசார் தெரிவித்துளளன.] (இ)

அகில இலங்கை சைவ சமய விவகாரக குழு நேற்று அங்குரார்ப்பணம செய்து வைக்கப்பட்டது சமயத் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் சைவ சமயத்தின் நெறிகளை இளஞ்சந்ததியினர் கடைப்பிடிககும் வகையில் சேவை முன்னெடுக்கப் படவேண்டுமென பலராலும் வலியுறுத்தப்பட்டது,

ஏற்கனவே யாழ் மாநகரத்திற்குள இயங்கிய சைவ சமய விவகாரக் குழுவை விஸ்தீரணப்படுத்தவேண்டிய தேவையிருந்தமையால் இது அகில இலங்கை ரீதியாக இனிமேல் செயற்டுமெனவும, மாநகர சபையுடன் இணைந்து செயற்டுவது தவிர்க்கபபடுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

அதேநேரம் கடந்த எட்டு வருடங்களாக வெளியிட்டு வந்த நல்லைக்குமரன் மலரை தொடர்ந்து வெளியிடுவதாகவும் முடிவு செய்யப்பட்டது [ந]

# தூதுவர் எரிக்சோல்

## அமெரிக்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு

[வாஷிங்டன்]

இலங்கையின் இனவிவகாரம் தொடர்பாக சமரசப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் சிறப்புப் பிரதிநிதி எரிக்சோல்ஹெய்ம்அமெரிக்காவின் பாராளுமன்ற உறுப்பினர்களை நேற்று சந்தித்துப் பேசியுள்ளார்.

நோர்வேயின் பிரதி வெளி விவகார அமைச்சர் சகிதம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்த எரிக்சோல் ஹெய்ம் அமெரிக்காவின்உள் துறை பிரதியமைச்சர் றிச் சேர்ட் அனெட்டேயுடன் இலங்கை இனவிவகாரம் பற்றிப் பேசியபின்னரே பாராளுமன்ற அங்கத்தவர்களுடன் பேசியுள்ளார்.

கடந்த நான்கு மாதகாலமாக விடுதலைப் புலிகள் தாக்குதல் எதிலும் ஈடுபடாமல் யுத்தநிறுத்தம் செய்திருந்தமையையும் நோர்வே தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் அங்கு பாராட்டியுள்ளதோடு இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் விதித்த வேண்டுகோளை அடுத்தே நோர்வே சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (வ)

### புலிகளின் தடை நீக்க கோரிக்கை

# தூதுவர் கோபாலகிருஷ்ணனுக்கு இந்திய அரசு அவசர அழைப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னதாக.தம் மீது விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கவேண்டுமென்று நோர்வேத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் மூலம் கோரியதையடுத்து.எழுந்துள்ள நிலமை பற்றி ஆராய இலங்கைக்கான இந்தியத்தூதுவர் கோபாலகிருஷ்னகாந்தி அவசரமாக இந்தியாவுக்கு அழைக்கப்பட்டு அங்கு சென்றுள்ளார்.

கொழும்பிலிருந்து நேற்று முன்தினமிரவு தூதுவர் கோபாலகிஷ்ன காந்தி புதுடில்லி சென்றுள்ளாரென கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துளது.

வன்னியில் விடுதலை புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சுப தமிழ்ச்செல்வனைச்சந்தித்து பேயபின்னர் எரிக்சொல்ஹெய்ம். கொழும்பில் இந்தியத் தூதுவர் கோபாலகிஷ்ன

[8ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வட பிராந்திய போக்குவரத்துச் சபை

## சாரதிகளுக்கான பதவி வெற்றிடங்கள்

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் சாலைகளில் பேருந்துச் சாரதிகளுக்கான வெற்றிடங்கள் இருப்பதால் யாழ் மாவட்டத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட கீழ்க் காணும் தகைமை உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன;

**01) தகைமைகள்**

அ) கல்வித்தகைமை ஆகக்குறைந்தது 08 ஆம் வகுப்பு அல்லது 09 ஆம் ஆண்டு சித்தியடைந்திருக்க வேண்டும்.

ஆ) நிறை : 45 கிலோவிற்கு குறையாமல் இருக்கவேண்டும்.

இ) உயரம் : 5 அடி 3 அங்குலமும் அதற்கு மேலும்;

ஈ) வயது : 23 தொடக்கம் 45 வயதுவரை (2001.06.15 ஆம் திகதியன்று)

02) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்;

03) மோட்டார்வாகனத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சகல மோட்டார் கோச்சு ALL MOTOR COACHES வாகனங்கள் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருப்பதுடன், அவ்வாறான கனரக வாகனங்கள் செலுத்துவதில் இரண்டு (02) வருடங்களுக்கு மேலான அனுபவம் இருத்தல் வேண்டும்;

04) வ.பி.போ. சபையின் சாரதிப் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்றிருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.

05) விண்ணப்பதாரர்கள் யாழ். மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இதை உறுதிப்படுத்தும் பிரதேச செயலரின் மேலொப்பம் இடப்பட்ட கிராம சேவையாளரின் கடிதம் இணைக்கவேண்டும்;

06) நேர்முகப் பரீட்சையின் போது பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் சமர்ப்பிக்கவேண்டும்;

07) விண்ணப்ப முடிவிற்கான திகதி : 2001.06.15

08) விண்ணப்பங்கள் யாவும் 'ஆளணி முகாமையாளர், வ.பி.போ. சபை பலாலி வீதி, கோண்டாவில், என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்;

09) விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் 'சாரதி பதவிக்கான விண்ணப்பம்' என்பதனை குறிப்பிடவும்;

10) மேற்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் (12' × 8' அளவில்) தயாரித்து பூர்த்தி செய்தல் வேண்டும், 2001.06.15 ஆம் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

பொது முகாமையாளர்,
வடபிராந்திய போக்குவரத்துச் சபை,
கோண்டாவில்;

### மாதிரி விண்ணப்பம்

1. முழுப் பெயர்:
2. முதலெழுத்துக்களுடன் பெயர்:
3. தற்போதைய வதிவிட முகவரி:
4. பிறந்த திகதி:
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கவும்)
5. 15. 06. 2001 இல் வயது:
வருடம் : மாதம் : நாள் :
6. தேசிய இனம் :
7. உயரம் : அடி : அங்குலம்:
8. நிறை: கிலோ :
9. கல்வித் தகைமை :
(சான்றிதழின் பிரதி இணைக்கவும்)
10. சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :
(சாரதி அனுமதிப்பத்திர பிரதி இணைக்கவும்)
11. அனுபவம் :
(சான்றிதழின் பிரதி இணைக்கவும்)
12. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்:
13. வேறு விசேட தகைமைகள் இருப்பின்குறிப்பிடுக:
14. கிராம சேவையாளரின் பிரிவு: இல:
(யாழ் மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர் என்பதை உறுதிப்படுத்தி பிரதேச செயலாளரின் மேலொப்பமிட்ட கிராம சேவையாளரின் கடிதத்தின் பிரதி இணைக்கவும்)

மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களில் தவறுகள், பிழைகள் காணப்படுமிடத்து எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும் நான் நன்கு அறிவேன் அத்துடன் வ.பி.போ. சபையின் சகல சாலைகளிலும் தேவை ஏற்படும்போது முகாமையால் பணிக்கப்படும். சந்தர்ப்பங்களில் கடமை புரிய இத் தால் சம்மதம் தெரிவிக்கின்றேன்;

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

(C/2023)


## இராசி பலன்

24-5-2001

(வைகாசி 10 வியாழன்)
பிரதமை காலை 7.47வரை
ரோகிணி ந.ப 11.45 வரை
ராகுகாலம் 1.22-2.52
நல்ல நேரம் 7.22-8.52

**மேடம்**
முயற்சி தாமதம், மாதர் நட்பு, வாக்கு கலகம், மனக் கவலை

**இடவம்**
உஷ்ண வியாதி கற்பனை மிகுதி, புதிய பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும்.

**மிதுனம்**
காரிய அலைச்சல், உணர்ச்சி வசப்படல், பொருள் விரயம் தந்தை வழி உறவு

**கடகம்**
முயற்சி கைகூடும், மதிக்கப் படுதல், மனமகிழ்ச்சி, தெய்வ தரிசனம்.

**சிங்கம்**
உத்தியோக மேன்மை, பிறர்உதவி, நல்ல செய்தி காரியம் கைகூடும்;

**கன்னி**
வயிற்றுக் கோளாறு, கௌரவக் குறைவு, பிரயாணம் அச்சமான நிலை;

**துலாம்**
எதிர்பாராத பிரச்சினை, போனசசுகம், காரிய தடங்கல், வியாதி.

**விருச்சிகம்**
சுவாரஸ்யம், வாகன வசதி அபூர்வ சந்திப்பு, காரிய ஜெயம்;

**தனுசு**
முயற்சிகைகூடும், சந்தோசம் ஆரோக்கியம் பகைவர் விலகுவர்.

**மகரம்**
தாழ்வு நிலை, புத்திரரால் கவலை, வியாபார மேன்மை, காரிய இடையூறு;

**கும்பம்**
தன்னம்பிக்கைக் குறைவு, மனப்பதட்டம், வேண்டாத உறவு. முயற்சி தாமதம்.

**மீனம்**
நினைத்த காரியம் கைகூடும் சகோதரர் உதவி வாக்கு மேன்மை, பிரயாணம்.
(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

வளவன்

## பொருட்கள் எருத்துவர அனுமதியில்லை

(யாழ்ப்பாணம்)

சங்கத்தானை, சாவகச்சேரி வடக்கு, மீசாலை மேற்கு ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை சொந்த இடங்களுக்கு கடந்த திங்களன்று கொடிகாமம் சிவில் நிர்வாகக் காரியாலயத்திலிருந்து படைத்தரப்பினர் அழைத்துச்சென்றனர்;

மேற்படி மக்கள் தமது வீடுகளைப் பார்வையிடவன்றி, தமது பொருட்களை எடுத்துவர அனுமதிக்கப்படவில்லை;

(உ-6)

## தமிழ்த்தின போட்டிகள்

உடுவில் கோட்டப்பாடசாலைகளுக்கான வலயமட்டத் தமிழ் தினப் போட்டிகள் யூன் மாதம் 1 ஆம் 2 ஆம் 3 ஆம் 5 ஆம் திகதிகளில் இராமநாதன் கல்லூரியிலும். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளதாக மேற்படி கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் தெரிவித்துள்ளார்;

(உ-2)


நல்லூர் பிரதேச சபை

திருநெல்வேலி நவீன சந்தை மேல்மாடிக் கடைகள்

## கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபை

**கடை இலக்கம்: 01, 02, 03, 06, 08, 09 10, 11, 12, 13, 14.**

நல்லூர் பிரதேசசபையின் திருநெல்வேலி நவீன சந்தை மேல் மாடிக்கடைகள் பதினொன்று (11) 2001ம் ஆண்டு ஆனி மாதம் தொடக்கம் வாடகைக்கு விடுவதற்கு கேள்விகள் 11-06-2001ம் திகதி திங்கட்கிழமை காலை 10:00 மணிவரை நல்லூர் பிரதேசசபை தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்; அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை 'தலைவர்' நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் கடையின் இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இணைப்பிரதியை 'உதவி உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்.' என முகவரியிட்டு அனுப்பி வைத்தல் வேணடும்,

கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட மீளளிக்க முடியாத படிவக் கட்டணமும் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்துவதன் பேரில் நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் 04-06-2001ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டை கொண்டு வருதல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் மூன்று நாட்களுக்குள் கீ. மணி, பொருட்கள் சேவைகள் வரி (ஜீ. எஸ். ரீ) என்பவற்றின் முழுத்தொகையையும் செலுத்தி ஒப்பந்தம் செய்தல் வேண்டும். மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் காரியாலய நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**குறிப்பு:**

1) ஆகக்குறைந்த கேள்வித் தொகைக்குக் கீழ் குறிப்பிடப்படும் கேள்விக்காரரின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது;
2) ஒரு விண்ணப்பப் படிவத்தில் ஒரு கடைக்கு மட்டும் விண்ணப்பிக்க முடியும்;
3) தங்களினால் கோரப்படும் கேள்வித் தொகைக்குப் புறம்பாக தொகையின் 12.5% பொருட்கள் சேவைகள் வரியாக (ஜீ. எஸ். ரீ) செலுத்தப்படல் வேண்டும்; மேற்படி தொகையும் விண்ணப்பப் படிவத்தில் காட்டப்படல் வேண்டும்;
4) கேள்விப்பத்திரத் தொகையுடன் 12.5% பொருட்கள் சேவைகள் வரி (ஜீ. எஸ். ரீ) செலுத்தப்படல் வேண்டும்.
5) தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்பே அனுமதி வழங்கப்படும்;

| கடை இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த கீ.மணி (ஜீ. எஸ். ரீ. தவிர்ந்த) |
|---|---|---|---|
| 01 | [illegible]0/= | 10000/= | 210,000.00 |
| 02 | 500/= | 10000/= | 210,000.00 |
| 03 | 500/= | 10000/= | 144,000.00 |
| 06 | 500/= | 10000/= | 144,000.00 |
| 08 | 500/= | 10000/= | 210,000.00 |
| 09 | 500/= | 10000/= | 192,000.00 |
| 10 | 500/= | 10000/= | 192,000.00 |
| 11 | 500/= | 10000/= | 288,000.00 |
| 12 | 500/= | 10000/= | 168,000.00 |
| 13 | 500/= | 10000/= | 168,000.00 |
| 14 | 500/= | 10000/= | 168,000.00 |

க. மணிபல்லவராஜன் (ஜே. பி. யு. எம்)
தலைவர்
நல்லூர் பிரதேச சபை;

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.

(கி/2025)

# போதனா வைத்தியசாலையின் நிகழ்கால செயல்களை அம்பலமாக்கிய 'சிதறல்' நாடகம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த நாடகமும் அரங்கியலும் சிறப்புத்துறை இறுதி யாண்டுமாணவிகள் ந. யபிதா, வை. வைதேகி, பா.கிறிஸ்ரினா, து. சசிகலா ஆகியோர் இணைந்து வழங்கிய நாடகம். (ஆ.ர்.)

பல்கலைக்கழக மாணவர்கள் தாயாரித்து வழங்கும் 'சிதறல்சள்' எனும் நாடக ஆற்றுகை (21. 5. 2001 இல் யாழ். போதனா வைத்திய சாலையிலும் யாழ். திருமறை சலாமன்ற அரங்கிலும் இடம் பெற்றன.

யாழ். பல்கலைக்கழகக் கலைஞர்சளும், யாழ். திருமறைக் கலாமன்ற கலைஞர்சளும் இந் நாடக ஆற்றுகையில் பங்கெடுத்தனர்.

### மக்கள் விரோத செயல்கள்

யாழ். போதனா வைத்திய சாலையில் வெளிநோயாளர் பிரிவிகளிலும் பாதுகாப்பு கடமைகளிலும் நடைபெறும் மிகமோசமான மக்கள்விரோத செயல்களை இது சுட்டிக் காட்டியது.

யாழ். போதனா வைத்திய சாலைசிற்றூழியர்களின் கண்ணிய மற்ற போக்கு சலுகை முன்னுரிமை, பண்பற்ற வார்த்தைப் பிரயோகம் மற்றும் பாதுகாப்பு ஊழியர்களின் அராஜகங்கள் போன்றவற்றால் சாதாரண பொது மக்கள் எந்தளவு தூரம் பாதிக்கப் படுகின்றார்கள் என்பதனை இந்த 'சிதறல்கள்' நாடகம் பிரதிபலித்தது.

### அரங்கமில்லாமல்

இந் நாடகத்தின் அரங்கமில் ஆற்றுகை' எனும் வடிவம் காலை யாழ் போதனா

ஆக்கம்:-

## ஆ. ஜென்சன் றொனால்ட்

வைத்திய சாலையில் இடம் பெற்றது.

இதன் போது மக்களோடு மக்களாகக் கலந்திருந்த நாடக கலைஞர்கள் தமது ஆற்றுகையை வழங்கினர்.

இது உண்மையில் அங்கு நடக்கும் சம்பவம் போலவே மக்களும் கருதியதால் மிகுந்த விறுவிறுப்பாக இடம் பெற்றது.

இது தொடர்பாக வாக்குவாதங்கள் ஏற்பட்டு பொலிஸார் வரை விடயம்சென்றது.

### உண்மை நிலை அறிந்தனர்

பின்னர் இந்த நாடகத்தின் தன்மையையும் இன்றைய பிரச்சினையையும் பொலிஸாருக்கும் போதனா வைத்தியசாலை நிர்வாகத்திற்கும் எடுத்துக் கூறியதைஅடுத்து,

இனிமேல் வைத்தியசாலை சிற்றூழியர்கள், மற்றும் பாதுகாபபு கடமை புரிவோர், இவ்வாறான ஒழுங்கற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு மக்களிற்கு பாதிப்பு ஏற்படுத்த இடமளிக்கப்பட மாட்டாதென்றும்,

அவ்வாறு சம்பவங்கள் ஏதாவது ஏற்படின் உடனடியாக வைத்தியசாலை நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தின் உரிய வகையின் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் உறுதி அளித்தனர்.

### திருமறைக் கலா மன்றில்

பின்னர் மாலை 6.45 மணியளவில் யாழ். திருமறைக் கலா மன்ற அரங்கில் இச் 'சிதறல்' நாடக ஆற்றுகை மேடை யேற்றப்பட்டது.

இந் நாடகத்தைப் பார்க்க நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்று கூடியிருந்தனர்.

நாடகம் மிகவும் விறுவிறுப்பாகவும் யதார்த்த ரீதியில் பிரச்சினையை கூறுவதாகவும் அமைந்திருந்தது.

நாடகத்தின் இறுதியில் அங்கு பார்வையாளர்களாக குழுமியிருந்த மக்களிடையே கலைஞர்கள் இறங்கிச் சென்று இப் பிரச்சினை தொடர்பான கருத்துக்களையும் எடுக்க வேண்டிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்குரிய வழிமுறைகளையும் கேட்டறிந்தனர்.

இந் நிலையில் அங்கு கருத்துத் தெரிவித்த பார்வையாளர்களிடையே பல வாதப் பிரதி வாதங்கள் எழுந்தன.

### விழிப்புணர்வு

இருப்பினும் இந் நாடக ஆற்றுகை எமது சமூகத்திலுள்ள பிரச்சினையை சிறப்பாக தொட்டு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளதாகவே பெரும்பாலான மக்களும் கருத்து தெரிவித்ததோடு இம் முயற்சியை இன்றும் பல்வேறு பகுதிகளுக்கு விரிவு படுத்துவதோடு சம்பந்தப்பட்டவர்களை எட்டக் கூடிய வகையிலும் மேற்கொள்ளும்படி கேட்டுக் கொண்டனர்.

## அலரிவிதை உண்டு மரணம்

[யாழ்ப்பாணம்]

அலரிவிதை உண்டு ஆபத்தான நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டவர் அங்கு மரணமானார்.

கே கே எஸ். வீதி கொக்குவிலைச் சேர்ந்த இருபிள்ளைகளின் தந்தையான விநாயக மூர்த்தி விக்கினேசுவரன் [வயது 35] என்பவரே நேற்றைய தினம் இவ்வாறு மரணமானவர் ஆவார். [உ-104[

## நிர்வாக சபை தெரிவு

(வடமராட்சி கிழக்கு)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளையின் நிர்வாக சபை தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

தலைவராக எஸ் தவராசா செயலாளராக எஸ் செல்வகுணச்சந்திரன், பொருளாளர் செல்வி கே ஜெஸ்ரீந் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-43)

## தரம்உயர்வுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களுக்கானதரம் I IIற்கான நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் முதலாம் திகதி வரை யாழ் மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களில் இடம் பெறவுள்ளதாக கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன (உ-10)

# கர்பிணிப் பெண்கள் வயதானவர்கள் மரணவீதம் தீவுப்பகுதியில் அதிகரிப்பு

### உரிய மருத்துவ வசதிகள் வழங்கப்படுவதில்லையாம்

(வடமராட்சி கிழக்கு)

தீவுப்பகுதியில் அடிப்படை மருத்துவ வசதிகள் எவையுமே உரிய வசையில் இதுவரை வழங்கப்படாமையினால், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் நோயுற்ற வயதானவர்களின் மரண வீதம் அண்மைக்காலங்களில் அங்கு மோசமாக அதிகரித்து வருவதாக ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இப் பகுதியில் மாவட்ட வைத்திய அதிகாரி பதவி உட்பட 5 இற்கும் மேற்பட்ட மருத்துவர் பதவி வெற்றிடங்கள் இற்றைவரை நிரப்பப் படாதுள்ளது.

முன்பு ஒரேயொரு ஓய்வு பெற்ற உதவி வைத்தியர் மட்டுமே ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றி வந்தார்.

எனினும் அவ் உதவி வைத்தியருக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக சேவையில் இருந்து விலகி விட்டார் எனவும் மாவட்ட வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நெடுந்தீவு, அனலைதீவு, புங்குடுதீவு, வேலணை உள்ளிட்ட தீவுப்பகுதியில் உள்ள ஒரேயொரு மாவட்ட வைத்தியசாலை தற்போது வைத்தியர்களே இல்லாத நிலையில் செயற்பட்டு வருவதும் சுட்டிக்காட்டத்தக்கது.

அண்மையில் அனலைதீவுப் பகுதியிலிருந்து பிரசவத்திற்காக அபாயகரமான நிலையில் கடற்படையினரால் படகு மூலம் கொண்டுவரப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் மேலதிக சிகிச்சைக்கென அம்புலன்ஸ் வண்டியில் யா/போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுகையில் மரணமாகிவிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தீவுப் பகுதியின் இக் கட்டான மருத்துவ நிலைமை மற்றும் அவசர தேவைகள் குறித்து ஈ.பி.டி.பி அமைப்பின் யா/மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (உ-43)

## கும்பாபிஷேகம்

(கொழுமபு)

கம்பளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள தேவஸ்தான நவ குண்ட அஷ்டபந்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர் வரும் மாதம் 3 ஆம திகதி இடம் பெறவுள்ளது.

பூர்வாங்க கிரியைகள் எதிர் வரும் திங்கட்கிழமை விநாயகர் வழிபாடடுடன் ஆரம்பமாகும். (உ)

## விபத்தில் காயம்

(மந்திகை)

மாலு சந்திப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வதிரி கரவெட்டியைச் சேர்ந்த தியாகராசா பரமசிங்கம் (வயது53) என்பவரே காயமடைந்துபருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23)

## பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

கல்வி டிப்ளோமா பரீட்சைகள்எதிர்வரும்யூன்30,யூலை1 திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரியிலும், இந்து மகளிர் கல்லூரியிலும் இடம் பெறவுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-10)

## குருகுலம் ஆரம்பித்திருப்பது பிராமண குலத்திற்கு கிடைத்த வரப்பிரசாதம்

(யாழ்ப்பாணம்)

வேதம் ஓதுதல் வேதியர்க்கு அழகு' என போற்றப்பட்டுளளது. அந்தவகையில் எமது பிராமண சமூகத்தின் எதிர்கால சந்ததியினர் சிறந்த முறையில் வேதங்களை ஓதுவதற்கும் சமஸ்கிருத கல்வியை பயிலுவதற்கும் முன்னைய காலங்களில் இருந்தது போன்று குருகுலம் ஒன்று இல்லையே என்ற மனக்குறை இன்று சர்வதேச இந்துமத குருபீடத்தின் மூலம் ஆரம்பமாகும் குருகுலத்தால் நீங்கியுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் இடம் பெற்ற ஸ்ரீ ஐயப்ப குருகுல விழாவில், கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் அவ்வாறு தெரிவித்தார். (உ)

## கசிப்பு ஒழிப்பில் கிராம அலுவலர் தீவிரம்

(ஆவரஙகால)

விற்பனைக்காக கொண்டு செல்லப்பட்ட கசிப்பினை கைப்பற்றிய கிராம அலுவலர் அதனை மக்கள் முனனிலையில் நிலத்தில் ஊற்றிய சம்பவம் அண்மையில் இடம் பெற்றது

நவக்கிரி புத்தூர் எனும் இடத்தில் வைதது விற்பனைக்காக கொணடு செல்லப்பட்ட 30 லீற்றர் கசிபபினை கைப்பற்றிய புத்தூர் வடக்கு கிராம அலுவலர் மீ. இராசதுரை,

அதனை மக்கள் முன்னிலையில நிலத்தில் ஊற்றி அழித்தார். (உ-57)

## மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் இன்றுமுதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம)

யாழ் மாவட்டப்பாடசாலைகளுக்கு இடையிலான மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று பி.ப.1.30 மணிக்கு ஆரமபமாகி, தொடர்ந்து 3 தினங்கள் இடம்பெறவுள்ளன.

நீளம் பாய்தல், தட்டெறிதல், குண்டெறிதல், ஈட்டி எறிதல், கோலூன்றிப்பாய்தல், 100 மீற்றர், 200 மீற்றர் 800 மீற்றர் ஓட்டம் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன. [உ-10]

## இந்திய மீனவர் மீதான வழக்கு விசாரணைகள் நாளை ஆரம்பம்

யாழ் சிறைச்சாலையில் உள்ள 39 இந்திய மீனவக் கைதிசளுக்கான வழக்குகள் மிகவிரைவில் நடைபெறவுள்ளன.

வெவ்வேறு காலப் பகுதியில் கைது செய்யப்பட்ட இம 39 மீனவர்களின் 31 பேருக்கான வழக்கு விசாரணைகள் நாளை யாழ் நீதி மன்றிலும் மீதி 8 பேருக்கான வழக்கு விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதி மன்றிலும் நடைபெறவுள்ளன. (உ-2)

## வடமராட்சிப் பகுதியில் அபி. தொண்டர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பம்

(மந்திகை)

இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தித் தொண்டர்சளுக்கான பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி தெற்கு, மேற்கு, வடமராட்சி வடக்கு பிரதேசசெயலகங்களில் கடந்த திங்கள் முதல் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச தொண்டர் களுக்கு பிரதேசசபை பொது நூலக மண்டபத்திலும், தேவரையாளி இந்துக்சல்லூரி முறைசாராக்கல்விப் பிரிவுமண்டபத்திலும் பயிற்சிகள் இடம் பெற்று வருகின்றன.

வடமராட்சி வடக்கு பிரதேச தொண்டர்களுக்கு புலோலி கால்நடை வைத்திய நிலையத்திலும் புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை முன்பாக அமைந்துள்ள மண்டபத்திலும் பயிற்சி நடைபெறுகிறது.

அதேவேளை, தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட அபிவிருத்தித் தொண்டர்களுக்கான பயிற்சி வகுப்புகள் இன்னமும் ஆரம்பிக்கப் படாது அவர்கள் தொடர்ந்தும் சூழல் மேம்பாட்டுத் திட்டங்களில் ஈடுபடுத்தப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ-23)

# செய்தித் துளிகள்

## சேக்கிழார் குருபூசை

(நல்லூர்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரால், கச்சேரி நல்லூர் வீதி, ஸ்ரீகாமாட்சியம்பாள் மடாலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 4.15 மணி வரை, சேக்கிழார் சுவாமிகள் குருபூசை விழா சிறப்பாக நடாத்தப்படவுள்ளது.

மன்றத்தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இப்பெருவிழாவின் போது காலை 8.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திலிருந்து சேக்கிழார் சுவாமிகள் திருவீதியுலாவாக ஸ்ரீகாமாட்சி அம்பாள் மடாலயத்துக்கு எழுந்தருளி விசேட பூசைகளுடன் ஆரம்பமாகும்.

அன்றையதினம்பி.ப.2 15 மணிக்கு பண்டிதமணி கலாநிதி மு கந்தையா, ''சைவ மகிமையும் பெரிய புராணமும்'' என்ற பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

2 45 மணிக்கு ''சேக்கிழார் புராண இசையுரை அரங்கு', இடம்பெறவுள்ளது இதில் சங்கீதபூஷணம் சபேரம்பலம் இசையையும், சைவப்புலவர் சு செல்லத்துரை உரையையும் வழங்கவுள்ளனர்.

(உ-103)

## அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலயமட்டத்தில்நடைபெறவுள்ள கூடைப் பந்து, பூப்பந்து, சதுரங்கம் ஆகியபோட்டிகளில் பங்குபற்ற விண்ணப்பித்த வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை8.30மணியளவில் யாழ் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. மேற்படி வலய உடற் கல்விப் பணிப்பாளர் வி பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

(உ-2)

## பொன்னாடை போர்த்திக் கௌரவம்

(நல்லூர்)

வண்ணை - நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ காமாட்சியம்பாள தேவஸ்தான மகோற்சவ தினங்களில் சமயச்சொற்பொழிவாற்றிய, கொக்குவில் செல்வன் ஷண்முககுமரேசன் பாலஷண்முகன், யாழ். மேலதிகக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளையால் ''பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்''

ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட பரிசளிப்பு விழாவின் போதே, இக் கௌரவிப்பு இடம்பெற்றது. (உ-103)

## வீடியோப் படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் அடுத்ததாக' வன்முறை எதிர்வன்முறை கலாசாரமும் பெண்ணியமும் என்றதலைப் பில்கீழ் 'அவுட் ரேஜ்'' எனும் திரைப்படம் 26 ஆம் திகதி சனிக்கிழமை மு. ப 10. 00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்து பயன் பெறலாம் எனப் புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## மின் தடை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மின் நிலையத்தில் அவசர திருத்த வேலைகள் இடம் பெறவுள்ளதால், 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் பி. ப. 5. 00 மணி வரை யாழ். குடாநாடு பூராகவும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## குருபூசை

(நல்லூர்)

வண்ணை-ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் அடுத்தமாதம் 7 ஆம் திகதி வியாழக்கிழமை திருஞானசம்பந்தர் குருபூசை சிறப்புற நடைபெறவுள்ளது.

காலையில் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று, மாலை 4. 30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை, திருவீதியுலா என்பன இடம்பெறவுள்ளன.

திருஞானசம்பந்த சுவாமிகளின் திருப்பதிகப் பண்ணிசையுடன் வெளிவீதியுலா இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-103)

## ஆண்டு விழா

(நல்லூர்)

மாணவர்களிடையே இறையுணர்வு, பக்தி, என்பனவற்றை வளர்க்குமுகமாக செயற்பட்டு வந்த திருநெல்வேலி கலாமன்ற கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் 45 ஆவது நிறைவு விழா எதிர்வரும் ஜூன்மாதம் நடைபெறவுள்ளது.

பா. பாலகணேசனின் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் சொற்பொழிவுகள், விசேட கூட்டுப்பிரார்த்தனை என்பன இடம்பெறவுள்ளன. (உ-103)

## விரைந்து நடவடிக்கை

(வடமராட்சி கிழக்கு)

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் சேதத்திற்கு உள்ளாகியுள்ள சாவகச்சேரி நகரையண்டிய வர்த்தக நிலையங்களை மீள்புனரமைக்கவும் அப்பகுதிகளில் பொதுமக்களை மீளக் குடியமர்த்தவும் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார்.

[உ-43]

## விற்பனைக்கு தயார்

(நல்லூர்)

புளியங்கூடல புகையிலைச் செய்கையாளர்கள் புகையிலையை உலர்த்தி விற்பனைக்குத் தயார் செய்து வருகின்றனர்.

யாழ். குடாநாட்டின், குறிப்பிட்ட சில கிராமங்களிலிருந்தும் புகையிலை செடிகளைக் கொள்வனவுசெய்து, அங்கு கொண்டு சென்று உலர்த்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது (உ-103)

## கணனிப்பிரிவு அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் நிறுவனத்தில் கணனிப்பிரிவு கற்றல் கற்பித்தல் மூலவள நிலையம் அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைநிறுவனஅதிபர் த. வரதராஜா தலைமையில் இடம் பெறவுள்ளது. [உ]

## தமிழ் விழா

(நல்லூர்)

யாழ். புனிதமரியாள் வித்தியாலயத்தின் தமிழ்த்தின விழா, வரும்மாதம் 7 ஆம் திகதி வித்தியாலயக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

முத்தமிழ் நிகழ்ச்சிகள் இதில் இடம்பெறவுள்ளன.

(உ-103)

# விடுதலைப் புலிகள் மீதான தடை தற்காலிகமாக நீக்கும் சாத்தியம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசாங்கம் தற்காலிகமாக நீக்கும் சாத்தியம் உண்டுஎனபிரசாத் குணவர்த்தன ஐலண்ட் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் மீதான தடையை தற்காலிகமாக நீக்குவது குறித்து அமைச்சரவையில் ஆராய்ந்து நாற்பத்தெட்டுமணி நேரத்திற்குள் முடிவு தெரியவரும் என நம்பகமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாகவும்,

இந்நடவடிக்கையை இப்பொழுதுஎடுக்கக்கூடிய நிலையிலிருந்தாலும் இருதரப்பும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான ஒருசம்பாஷனைக்கு வழிவகுப்பது இதன் நோக்கமாகும் என்றும் அவர் அப்பத்திரிகையில் எழுதியுள்ளார்.

விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தால் மாத்திரமே அவர்கள் மீதான தடை நீக்கப்படும் எனவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. [செ]

## சுகாதார வாரம் அனுஷ்டிப்பு

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தேசிய சுகாதார வாரத்தையொட்டி பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 21ஆம் திகதி ஆரம்பமாகி இன்று 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந் நிகழ்ச்சித்திட்டத்தில் ''வழமான வாழ்வுக்கு மக்களை தொற்று நோய்களிலிருந்து காப்போம்,, என்ற தொனிப்பொருளில் நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

(உ-23)

## வைகாசிப் பொங்கல்

(யாழ்ப்பாணம்)

புங்கன்குளம் வில்வையடி ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. [செ]

# பயன அனுமதி வழங்கப்பட்டோர்விபரம்

மே மாதம் 22 ஆம திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத்தரப்படுகின்றது;

### சங்கானை

| | |
|---|---|
| 185175 ஏ | 185195 ஜி |
| 185196 ஏ | 185196 பி |
| 185196 சி | 185196 டி |
| 185196 ஈ | 185196 எப் |
| 186806 ஏ | 186807 ஏ |
| 186910 ஏ | 186910 பி |
| 186910 சி | 186910 டி |
| 186910 ஈ | 186910 எப் |
| 187132 ஏ | 187192 ஏ |
| 188658 ஏ | 188658 பி |
| 188658 சி | 188659 ஏ |
| 188665 ஏ | 188682 பி |
| 188692 ஏ | 188708 ஏ |
| 188799 ஏ | 188799 பி |
| 188799 சி | 188799 டி |
| 189398 ஏ | 189398 பி |
| 189398 சி | 189449 ஏ |
| 189460 ஏ | 189460 பி |
| 189525 ஏ | 189525 பி |

### நெடுந்தீவு

| | |
|---|---|
| 15154 ஏ | 15154 பி |
| 15155 ஏ | 15155 பி |
| 15155 சி | 15189 ஏ |
| 15189 பி | 15189 சி |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 185187 ஏ | 189113 ஏ |
| 189250 ஏ | 189250 பி |
| 189648 ஏ | 189648 பி |
| 189679 ஏ | 189680 ஏ |
| 189684 ஏ | 189684 பி |
| 189688 ஏ | 189688 பி |
| 189690 ஏ | 190872 ஏ |
| 190872 பி | 190893 ஏ |
| 190899 ஏ | 191044 ஏ |
| 191044 பி | 191225 ஏ |
| 192370 ஏ | 193000 ஏ |
| 193003 ஏ | 193138 ஏ |
| 193138 பி | 193358 சி |
| 193361 ஏ | 193368 ஏ |
| 193368 பி | 193368 ஏ |
| 193418 ஏ | 193430 ஏ |
| 193430 பி | 193430 சி |
| 193430 டி | 193430 ஈ |
| 193435 ஏ | 193449 ஏ |
| 193452 ஏ | 193468 ஏ |
| 193469 ஏ | 193486 ஏ |
| 193486 பி | 195157 டி |
| 195153 ஈ | 195157 எப் |
| 195187 பி | 195187 சி |
| 195198 ஏ | 195205 ஏ |
| 195205 பி | 195215 ஏ |
| 195217 ஏ | 195217 பி |
| 195218 ஏ | 195220 ஏ |
| 195221 ஏ | 195221 பி |
| 195221 சி | 195236 ஏ |
| 195264 ஏ | 195298 ஏ |
| 195309 ஏ | 195318 ஏ |
| 195328 ஏ | 195384 ஏ |
| 195384 பி | 195449 ஏ |
| 195521 ஏ | 195521 பி |
| 195521 சி | |

### ஊர்காவற்றுறை

| | |
|---|---|
| 14880 ஏ | 14736 ஏ |
| 14736 பி | 14764 ஏ |
| 14764 பி | |
| 14831 பி | 14831 ஏ |
| 14831 பி | 14832 ஏ |
| 14832 பி | 14839 ஏ |
| 11880 பி | 14887 ஏ |
| 14887 பி | 14893 ஏ |
| 14893 பி | 11912 ஏ |
| 14912 பி | 14912 சி |
| 14915 ஏ | 14974 ஏ |
| 14979 ஏ | 14980 ஏ |
| 14983 ஏ | 14995 ஏ |
| 14995 பி | 14996 ஏ |
| 14996 பி | 14997 ஏ |
| 14999 ஏ | 14999 பி |
| 14999 சி | 15000 ஏ |
| 15000 பி | 15004 ஏ |
| 15004 பி | 15015 ஏ |
| 15031 ஏ | 15031 பி |
| 15035 பி | 15045 ஏ |
| 15080 ஏ | 15080 பி |
| 15085 ஏ | 15085 பி |
| 15095 ஏ | 15095 பி |
| 15095 சி | 15120 ஏ |
| 15132 ஏ | 15133 ஏ |
| 15137 ஏ | 15137 பி |
| 15140 ஏ | 15164 ஏ |
| 15164 பி | 15168 ஏ |
| 15168 பி | 15168 சி |
| 15119 ஏ | 15179 பி |
| 15179 சி | 15179 டி |
| 15193 ஏ | 151193 பி |
| 151193 சி | 151193 டி |
| 151193 ஈ | 151193 எப் |
| 15193 ஜி | 15216 ஏ |
| 15220 ஏ | 15246 ஏ |
| 15246 பி | 15246 சி |
| 15246 டி | 15253 ஏ |
| 15284 ஏ | 15295 ஏ |
| 15295 பி | 15295 சி |

### நல்லூர்

| | |
|---|---|
| 188806 ஏ | 191074 ஏ |
| 191074 பி | 193126 ஏ |
| 193126 பி | 193126 சி |
| 193126 டி | 193126 ஈ |
| 193369 ஏ | 193387 ஏ |
| 193387 பி | 193387 சி |
| 193442 ஏ | 193446 ஏ |
| 193480 ஏ | 195170 ஏ |
| 195170 பி | |
| 195204 ஏ | 195204 பி |
| 195213 ஏ | 195221 டி |
| 195221 எப் | 195251 ஏ |
| 195251 பி | 195251 சி |
| 195379 ஏ | 141187 ஏ |
| 141187 சி | 183430 ஏ |
| 183430 பி | 186728 ஏ |
| 186782 ஏ | 187129 ஏ |
| 187129 பி | 187129 சி |
| 187128 டி | 187174 ஏ |
| 187197 ஏ | 187197 பி |
| 187197 சி | 187469 ஏ |
| 187469 பி | 188797 ஏ |
| 189365 ஏ | 189369 பி |
| 189366 ஏ | 189366 பி |
| 189366 சி | 189404 ஏ |
| 189404 பி | 189404 சி |
| 189404 டி | 189415 ஏ |
| 189528 ஏ | 189539 ஏ |
| 189539 பி | 189561 ஏ |
| 189561 பி | 189561 சி |
| 190507 ஏ | 190530 ஏ |
| 186837 பி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 166694 ஏ | 166694 பி |
| 166694 சி | 180579 ஏ |
| 183185 ஏ | 184995 ஏ |
| 185041 சி | 186877 ஏ |
| 186877 பி | 186877 சி |
| 186877 டி | 186877 எப் |
| 186877 ஜி | 187080 ஏ |
| 187080 பி | 187080 சி |
| 187080 டி | 188640 ஏ |
| 188652 ஏ | 188652 பி |
| 188789 ஏ | 188789 பி |
| 189316 ஏ | 189334 ஏ |
| 189334 பி | 189334 சி |
| 189357 ஏ | 189407 ஏ |
| 189407 பி | 189424 ஏ |
| 189413 ஏ | |
| 189440 ஏ | 189440 பி |
| 189440 சி | 189441 ஏ |
| 189562 ஏ | 190526 ஏ |
| 190527 ஏ | 190579 பி |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 181699 ஏ | 186767 ஏ |
| 186768 பி | 186837 ஏ |
| 186866 ஏ | 186866 பி |
| 187221 ஏ | 187221 பி |
| 188725 ஏ | 188793 ஏ |
| 189374 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 180326 ஏ | 180326 பி |
| 180326 சி | 180326 டி |
| 180337 ஏ | 183273 ஏ |
| 183362 ஏ | 183362 பி |
| 183362 சி | 184989 ஏ |
| 185041 ஏ | 185041 பி |
| 186612 ஏ | 186612 பி |
| 186735 ஏ | 186834 ஏ |
| 186871 ஏ | 188603 ஏ |
| 188660 ஏ | 188787 ஏ |
| 189362 ஏ | 189373 பி |
| 189373 ஏ | 189373 ஏ |
| 189392 ஏ | 189464 ஏ |
| 189464 பி | 189469 ஏ |
| 189531 ஏ | 189586 ஏ |
| 189586 பி | |

### வேலணை

| | |
|---|---|
| 14084 ஏ | 14084 பி |
| 14084 சி | 144855 ஏ |
| 14748 ஏ | 14742 பி |
| 14742 சி | 14742 டி |
| 14742 ஈ | 14780 ஏ |
| 14781 ஏ | 14784 ஏ |
| 14784 பி | 14784 சி |
| 14788 ஏ | 14797 ஏ |
| 14797 பி | 14820 ஏ |
| 14820 பி | 14820 சி |
| 14820 டி | 14823 ஏ |
| 14823 பி | 14836 ஏ |
| 14942 ஏ | 14850 ஏ |
| 14850 பி | 14850 சி |
| 14850 டி | 14853 ஏ |
| 14881 ஏ | 14898 ஏ |
| 14898 பி | 14898 சி |
| 14907 ஏ | 14908 ஏ |
| 14908 பி | 14910 ஏ |
| 14910 பி | 14910 சி |
| 14911 ஏ | 14938 ஏ |
| 14958 ஏ | 14958 பி |
| 14960 ஏ | 15960 பி |
| 14961 ஏ | 14972 ஏ |
| 15003 ஏ | 15006 ஏ |
| 15007 ஏ | 14007 பி |
| 15024 ஏ | 15024 பி |
| 15075 ஏ | 15105 ஏ |
| 15111 ஏ | 15122 ஏ |
| 15122 பி | 15143 ஏ |
| 15143 பி | 15144 ஏ |
| 15144 பி | 15149 ஏ |
| 15150 ஏ | 15203 ஏ |
| 15227 ஏ | 15235 ஏ |
| 15250 ஏ | 15254 ஏ |
| 15254 பி | 15258 ஏ |
| 15258 பி | 1525 ஏ |
| 15270 ஏ | |

## இன்று ஒரு தகவல்

# வேறு வழிவேண்டாம்

சீன நாட்டுச் சிற்றூர் வழியாகப் பெரியவர் ஒருவர்வந்து கொண்டிருந்தார். அங்கே வயல் வெளியில் ஒரு முதியவரும், இளைஞனும் உடலெங்கும் வியர்வை சொட்டக் கிணற்றிலிருந்து நிலத்திற்குத் தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்தனர் இதைக் கண்ட பெரியவர் நேராக அந்த முதியவரிடம் சென்று 'ஏன் இப்படித் துன்பப்படுகிறீர்கள்? நீங்கள் செய்யும்இந்த வேலையை நகரத்தில் மாடுகளைக் கொண்டு எளிதாகச் செய்கிறார்கள். இது உங்களுக்குத் தெரியாதா?' என்று கேட்டார்.

உடனே அந்த முதியவர் 'மெதுவாகப் பேசுங்கள், என் மகன் காதில் விழுந்துவிடப் போகிறது. அவன் இன்னும் சிறிது நேரத்தில் உண்பதற்காக வீட்டிற்குச் சென்று விடுவான். அதன் பிறகு வாருங்கள் பேசுவோம்' என்றார். பெரியவர்இதைக்கேட்டுவியப்படைந்தார். முதியவரின் மகன் சென்ற பிறகுஅவரிடம் வந்து, 'நான் சொன்னது உங்கள் மகனுக்குத் தெரியக் கூடாது என்று ஏன் நினைக்கிறீர்கள்? உங்கள் இருவரின் நன்மைக்காகத் தானே நான் இதைச் சொன்னேன்' என்றார்.

அதற்கு முதியவர் 'ஐயா! எனக்கு இப்பொழுதுஎண்பது வயதாகிறது. என் முப்பது வயது மகனுக்குத் துணையாக வயலில் இறங்கி வேலை செய்ய என் உடலில் இன்னும் வலிமையிருக்கிறது. வயலில் நாங்கள் இருவரும் வேலை செய்வதற்குப் பதிலாக மாடுகளைப் பயன்படுத்தலாம். எனக்கும் அது தெரியும். அப்படிச் செய்தால்என்மகனுக்கு எண்பது வயதாகும் போது அவன் என்னைப் போல் வலிமையுடையவனாக இருக்க மாட்டான். அதனால் உங்களை மீண்டும் வேண்டுகிறேன். என் மகனின் எதிரில் தயவு செய்து இதைப்பற்றிப் பேசாதீர்கள். எல்லாவற்றையும் விட அவன் உடல் நலம் எனக்கு மிக இன்றியமையாதது' என்று விளக்கம்தந்தார் இதைக் கேட்ட பெரியவர், 'என்னைமன்னியுங்கள் என்று சொல்லி விடை பெற்றார்.

**பேராசிரியர் எ சோதி**

# காணாமற் போனோர் விசாரணைகளுக்கு சமுகமளிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்- குடாநாட்டிலிருந்து 96,97 ஆண்டுக்காலப்பகுதிகளில்காணாமற்போனோர்சம்பந்தமாக பின்வரும்உறவினர்கள் சாட்சிகள்.

முறைப்பாட்டுக் காரரை உடன் யாழ். பொலிஸ்நிலையத்துடன் தொடர்பு கொண்டு சாட்சியம் வழங்குமாறு விசேட புலனாய்வுப் பிரிவினர் பணித்துள்ளனர்.

பூபாலசிங்கம்- ஜெயலலிதா (பி-75)முறைப்பாடு சரஸ்வதி சாட்சிகள்:இளையப்பா–சபாநாதன் நாவற்குழி மறவன் புலோ.

ஜே–297, ஜே–298 கிராம அலுவலர்கள.

கிருஷ்ணப்பிள்ளை- புவனேந்திரராசா முறைப்பாடு: புவனேநதிரராசா– விஜயா பொலிகண்டி தெற்கு வல்வெட்டித்துறை.

சாட்சி: ஜே-395- வன்னி மடம் கிராம அலுவலர்.

இராசையா- சசீந்திரன் முறைப்பாடு: இராசையா செல்வராணி நவாலி தெற்கு நாயன்மாாகட்டு.

சின்னத்துரை- கதிரவேற்பிள்ளை[பி-84]முறைபபாடு: தவராசா-பரமேஸ்வரிகப்பூதுகரவெட்டி, நெல்லியடி.

மாதர்- ஜெகனேஸ்வரன் முறைப்பாடு: மீனாட்சிஇல. 890 கைதடி யாழ்ப்பாணம்

தற்போதைய முகவரி: கொட்டைக்காடு தமிழ்க்கலவன் பாடசாலையடி சாட்சி: இராமமூர்த்தி- ஜெயலலிதா சீனியர்-தர்மலிங்கம்[பி–80] முறைப்பாடு: மகாரத்தினம சாந்தநாயகி கந்தரோடை சுன்னாகம் சாட்சி:- தவராசா கந்தவனம்- சிவராசாமுறைப்பாடு:சிவராசா-இராசநாயகி ஜெயந்திவாசாஇமையாணன் உடுப்பிட்டி, சாட்சி–சரஸ்வதி சம்பந்தப்பட்டகிராம அலுவலர்.

கந்தையா- புஸ்பராசா முறைப்பாடு: மாரி- கமலா கேரதீவு வீதி நாவற்குழி கைதடி.

சாட்சி: கந்தையா–விக்கின ராசா ஜே-296 கிராமஅலுவலர் நடராசா ஜீவரட்ணம் (பி-41) வேமபடி கேணி பளை.

சாட்சி: நடராசா விஜய ரட்ணம். பெயர் விபரம்தெரியாது (பி–50) சாட்சி: கார்த்திகேசு கனகசூரியா மட்டுவில் சாவகச்சேரி;

ஜெகநாதன் விஜயகுமார் சாட்சி: தம்பு ஜெகநாதன் 97 கொட்டடி யாழ்ப்பாணம்

நவரட்ணம் ஆனந்தராசா [பி-44]சாட்சிகள்: வேதியம் பாள் நவரட்ணம் அச்சுவேலி மேற்கு அச்சுவேலி.

மல்லி நவட்ரணம், நவரட்ணம்றேமலதா, நவரட்ணம் தவராசா விமலராசா.

திருநாவுக்கரசு சுதாகரன் [பி-86] மறவன்புலவுசாவகச்சேரி.

சாட்சிகள்: சண்முகம் நித்தியநாதன் மனைவி ஜே-297, ஜே-298 கிராமஅலுவலர்கள் யோண் பிள்ளை அன்ரன் அமலநாதன் ஏ-21 நாவற்குழி கைதடி.

சாட்சி: மேரியன், அன்கனிஸ்ராகோபலபிள்ளை ஜீவபாலா வல்லிபுரம் பாஸ்கரன் [பி-85] மறவன்புலகிழக்குசாவகச்சேரி.

சின்னத்தம்பி ஜெயபாலன்[பி-128] ஆவரங்கால் மேற்கு புத்தூர். ஆறுமுகம் தங்கராசா சாட்சிகள; அம்பலன் சின்னப்பிள்ளை சிவபாதம்,

மீசாலை மேற்குகிராமஅலுவலர்.

தங்கவேலு ராஜேந்திரகுமார் [பி–92] அல்வாய்.

சாடசிகள்: தாமோதரம் பிள்ளை தங்கவடிவேலு.

அமிர்தலிங்கம் அருளானந்தம் வண்ணார்பண்ணை

சுப்பிரமணியம்இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணம்.

சின்னத்தம்பி ஞானேந்திரன்[பி-83]எழுதுமடடுவாள். சாட்சிகள்– பரமலட்சுமி முகமாலை எழுதுமட்டுவாள்.

தந்தை– சரவெட்டி முகாம் சாட்சி- ஞானேந்திரன்சந்திரலேகா, சூட்டி. [உ–10,6]

## நிர்வாகிகள் தெரிவு

(நல்லூர்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் நடப்பு வருடத் தலைவராக, பண்டிதர் வ.பேரின்பநாயகமும், உப-தலைவராக சைவப் புலவர்சு செல்லத்துரையும்,செயலாளராக இ.தெய்வேந்திரனும், உப–செயலாளராக, ப.பாலசுப்பிரமணியமும், பொருளாளராக, பா.பத்மநாதனும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்;

(உ–103)

# இலங்கை நாட்டவர் 750 பேருக்கு

# அமெரிக்க குடியுரிமை அந்தஸ்து

(கொழும்பு)

அமெரிக்காவில், இலங்கையர்கள் 750 பேருக்கு குடியுரிமைஅந்தஸ்து வழங்கப் படவிருக்கிறது.

உலகளாவிய ரீதியில் 50 ஆயிரம் பேருக்கு அமெரிக்க குடியுரிமை அந்தஸ்து வழங்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

இக் குடியுரிமை அந்தஸ்து வழங்கும் நாடுகளில் பங்களாதேஷ் முன்னணியில் உள்ளது:

அந்நாட்டவர்கள் 5 ஆயிரம் பேருக்கு இவ் உரிமை வழங்கப்பட வுள்ளது.

இதேவேளை, அமெரிக்காவில் குடியுரிமை அந்தஸ்து கோரி 2 கோடி பேர் விண்ணப்பித்திருப்பதாகவும், 90 ஆயிரம் பேரது விண்ணப்பங்கள் பரிசீலனைக் குட்படுத்தப் படுவதாகவும் அறிய முடிகிறது

அமெரிக்காவில் குடியுரிமை பெறுவதானல், உயர்தர டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான தகுதியுடையவராகவும் 3 வருடங்கள் தொழில் புரிந்து அனுபவம் கொண்டவராகவும் இருத்தல் அவசியமாகும் (உ)

## நிர்வாகிகள் தெரிவு

(அரியாலை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க நல்லூர்பிரிவின்பொதுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை திருநெல்வேலி இந்து இளைஞர் மன்றகட்டடத்தில் நடை பெற்றது.

நடப்பாண்டுக்குரிய புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: இ அசோகன், செயலாளர்:செ. செல்வகுமாரன்,பெருளாளர்: இ குமரேசன்,உபதலைவர்: ந ஸ்ரீரஞ்சன், உள்ளக கணக்காய்வாளர்; கே.நாகேந்திரம் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக,

இ. சுகந்தன், சி கணேசன், இ. கிருஷ்ணமோகன், அ.அ றெஜினோல்ட், த. பிருதிவிராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்,

## திருட்டு

[ஆவரங்கால்]

வட்டுக்கோட்டை அத்தியடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள எஸ்.ஜெகன் என்பவரது வீட்டிற்குள் புகுந்த திருடர்குழு அங்கிருந்த 10 ஆயிரம் ரூபா பணத்தையும் பெறுமதிமிக்க இலத்திரனியல் உபகரணங்களையும் திருடிச் சென்றுள்ளன. [உ-57]

## மன்னார் அணி சம்பியனானது

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத்துறை அமைச்சினால் வடக்கு கிழக்கு மாகாண அணிகளுக்கிடையில் இடம்பெற்றுவரும் விளையாட்டுப்போட்டிகளில் அண்மையில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில்,மன்னார் அணி அதனை எதிர்த்தாடிய மட்டக்களப்பு அணியை வென்று இவ்வருட சம்பியனாக தெரிவானது. [உ]

## கலந்துரையாடல்

(வடமராட்சி கிழக்கு)

சாவகச்சேரிப் பகுதி வர்த்தக நிலையங்களை மீளஇயக்குவது தொடர்பான கலந்துரையாடல் கடந்த செவ்வாயன்று வரணிப் பகுதியில், 52 வது படைப்பிரிவின் அதிகாரி மற்றும் சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள் இடையேஇடம்பெற்றது, (உ-43)

# வீடு பார்க்க அனுமதி இல்லை

(வடமராட்சி கிழக்கு)

மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு மக்கள் வீடு பார்க்க கடந்த செவ்வாய்க்கிழமை சென்ற போது அனுமதி வழங்கப்படவில்லை எனத் தெரியவருகிறது; (உ–43)

# வடமராட்சி சக்கோட்டைக்கடலில் மீன்பிடிக்கத்தடை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சிப் பகுதியில் கடற்றொழில் புரிய படையினர் தடைவிதித்திருப்பதாக சம்பந்தப்பட்ட மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

சக்கோட்டை முனைவரை தொடக்கம் தொண்டைமானாறு வரையான கடற் பகுதியிலேயே மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஏனைய பகுதிகளில் வழமையான அறிவுறுத்தல்களின் பிரகாரம் மீன்பிடித் தொழில் இடம்பெற்று வருகிறது.

மேற்படி தொழில் செய்ய விதிக்கப்பட்டதடை தொடர்பாக வடமராட்சி கடற்றொழில் சமாசம் கடற்றொழில் ரீதியில் வளத் துறைத் திணைக்களம் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகம் ஆகியவற்றின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது (உ-43)

# வடமராட்சி பகுதியில்தீவிர சோதனை நடவடிக்கை

(வடமராடசி கிழக்கு)

வடமராட்சிப் பகுதியில் கடந்த சில தினங்களாக சோதனை நடவடிக்கை அதிகரித்திருப்பதாக அங்கு சென்றுவருவோர் தெரிவிக்கின்றனர்.

வல்லை, வல்லிபுரம் சோதனைச் சாவடிகளில் வழமையை விட சோதனை நடவடிக்கை அதிகரித்திருப்பதாகவும்,

விடுதலைப் புலிகள் ஊடுருவியிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து தாம் இவ்வாறான சோதனை நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதாக படையினர் தமிடம் கூறுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (உ–43)

# சைவசமய அறிவுப்போட்டி பரிசில் பெற்றோர் விபரம்

(நல்லூர்)

வண்ணை-அரசடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தை யொட்டி அண்மையில் நடத்தப்பெற்ற, சைவசமய அறிவுப்போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்கள் விபரம் நிலைரீதியாக வருமாறு,

ஆரம்பபிரிவு:-

இ. துவாரகா, க. உஷாந்தன், கி கிருஷோபன்

கீழ்ப்பிரிவு-:

த நிலபா, செ யோகநாத் க. யஸ்மிலா

மத்தியபிரிவு: -

ஞானசக்தி தாலறுபன் ஆா. அர்ஜுன

மேற்பிரிவு: மசுஜினி, வை சோபனா கா மதனிகா

மாணவர்களிடையே சைவ சமய அறிவை வளர்க்கும் நோக்குடன் வருடந்தோறும் இப் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும (உ 3)

# மனித கௌரவத்திற்கான மன்றத்தின் சேவைகள்

(யாழ்ப்பாணம)

மனித கௌரவத்திற்கான மன்றம் தமது இலவச சேவைகள் குறித்த விபரங்களை சிறிய செய்திக் குறிப்பு ஒன்றின் மூலம வெளியிட்டுள்ளது.

அதன் பிரகாரம், மனித உரிமை மீறல்கள தொடர்பாக விபரங்களைச் சேகரித்து தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,

கைது செய்யப்படும் இலங்கை,இந்திய மீனவர்களுக்குச் சட்ட உதவிகள் வழங்கி அவர்களைத் தமது சொந்த நாடுகளுக்கு அனுபபி வைத்தல்,

கைது செய்யப்படுபவர்கள், காணாமற் போனவர்கள் தொடர்பாக தொல்லை தவிர்ப்புக்குழு மற்றும் காவல் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல். அடிப்படை மனித உரிமை மீறல தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் வழக்குகள் தாக்கல் செய்தல்,

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும அவசரகாலச்சட்டங்களின கீழ் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருப்போருக்கு சட்ட உதவிகள் வழங்கி அவர்களை விடுதலை செய்தல உள்ளிட்ட வேறும் சில சேவைகளை இலவசமாக வழங்கி வருவதாக அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ 10)

## ஆங்கிலத்தின போட்டிகள்

[யாழ்ப்பாணம]

கோட்ட மட்டத்திலான ஆங்கில தின உடுவில் கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டிகள் யூன் மாதம் 11 ஆம், 12ஆம் திகதிகளிலும் தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைகளுக்கானபோட்டிகள் 7ஆம்8 ஆமதிகதிகளிலும் நடைபெறஉள்ளதாக அந்தந்தக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர், (உ–2)

## கும்பாபிஷேகம்

குப்பிளான் கற்றகரை விநாயகர் ஆலயத்தின மகா கும்பாபிஷேக விழா அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது. (உ-103)

* *

திருநெல்வேலி முழங்காவில் றடி ஸ்ரீவீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தின மஹா கும்பாபிஷேகப் பெருவிழா அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. (உ-103)

## யுத்தநிறுத்தத்திற்கு இஸ்ரேல் அழைப்பு

(ஜெருசலேம்)

பலஸ்தீனம் யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்த வேண்டும் என இஸ்ரேல் பிரதமர் கேட்டுள்ளார்.

பிரதமர் ஏரியஸ் சரோன், பலஸ்தீன நிலப்பரப்புகளில் யூதர்கள் குடியேறுவதை தாம் அனுமதிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

இதற்கிடையில் பலஸ்தீனம் மீது இஸ்ரேல் இராணுவத்தினரைத் தாக்குதல் நடத்த வேண்டாமென்று இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் செய்தியொன்றில் கேட்டுள்ளார்.

மத்திய கிழக்கில்யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவே பிரதமர் உட்பட இஸ்ரேலின் முக்கிய அமைச்சர்களும் விரும்புவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (து)

## புதுவையின் முதல்வராக சண்முகம் பதவியேற்பார்

(புதுவை)

புதுவை சட்டப் பேரவையின் புதிய முதலமைச்சராக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ரி சண்முகம் நாளை பதவியேற்கவுள்ளார்.

அன்றையதினம் அவர்மட்டுமே பதவியேற்பார் என்றும் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாவின் ஒப்புதல் பெற்ற பின்னர் இதர அமைச்சர்கள் பதவியேற்பார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சண்முகம் முதலமைச்சராக பதவியேற்பதற்கான ஒப்புதல் குடியரசுத் தலைவரிடம் இருந்து வந்துள்ளதால் அவர் நாளை 11.00 மணியளவில் தனது பதவியை ஏற்றுக் கொள்வார். (உ-9)

## மேயர் ஸ்ராலின் மீதும் ஊழல் குற்றச்சாட்டு

(சென்னை)

சென்னை மாநகர மேயர் மு.க. ஸ்ராலின் மீதும் முன்னாள் அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி மீதும் நூற்றுதொண்நூறு கோடி ரூபா ஊழல் புகார் குறித்து விசாரணைக்கு உத்தரவிடும்படி மாநகர ஆட்சி எதிர்க்கட்சியினர் நேற்று ஆளுநர் பாத்திமா பீபீயிடம் மனுஒன்றைக் கையளித்துள்ளனர்.

அ.இ.அ.தி.மு.க மாக்ஸிஸ்கம்யூனிஸ்கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் இதனைக் கையளித்தனர். [து]

## மணிப்பூரில் ஆட்சியைவீழ்த்தியவர்கள் அரசுஅமைக்க வரவில்லை

[புதுடில்லி]

சமதாக்கட்சி ஆட்சியிலிருந்த மணிப்பூரில் ஆட்சி கவிழ்க்கப்பட்டாலும் அரசை வீழ்த்தியவர்கள அரசு அமைக்க முன்வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அறுபதுபேர் கொண்ட மணிப்பூர் சட்டசபையில் சமதாககட்சி ஆட்சியை விழுத்தமாட்டோம் என்ற பாரதிய ஜனதாக்கட்சி கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது.

பாரதிய ஜனதாவும் சமதாவும் மத்திய அரசில் அங்கம் வகிக்கின்றன. உறவு முறிந்து விடுமோ என்று அஞ்சினார்கள். வாஜ்பாயும பாரதியஜனதா தலைவரும் மணிபபூரில் ஆட்சி அமைக்க மாட்டோமென்றும் சமதாவுக்கு எதிராகப் போகமாட்டோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

புதுடில்லியில் சமதாத் தலைவர்களுக்கும் பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர்களுக்கும் இடையில் உறவு மேலோங்கியதால் முன்னைய முதல்வரே காபந்து முதல்வராகக் கடமையாற்றுகிறார். (து)

## கல்விப் பகுதி
## வினா இல- 18

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..............................

சொந்த முகவரி: ..............................

கற்கும் பாடசாலை : ..............................

மாணவர் கையொப்பம் : ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :-

விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும் இதற்கான விடைகளை 28-5-2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

# ஜெயாவின் நியமனத்தை ஆட்சேபித்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(சென்னை)

அ இ அ தி மு கவின் தமிழக முதல்வராக செல்வி ஜெயலலிதா நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து வழக்கறிஞர் வி.செல்வராஜ் நீதி மன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

கடந்தவாரம் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவில், ஊழல் குற்றவாளியெனதீர்ப்பளிககப்பட்டு தேர்தலில் நிற்க முடியாதென்று நிராகரிக்கப்பட்டவர் முதல்வராக முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவை ஆராய்ந்த நீதிபதி சுப்பிரமணியம், சட்ட சபைத் தேர்தலில் நிற்க முடியாத செல்வி ஜெயலலிதா எப்படித் முதலமைச்சராக முடியும என்று கேள்வியெழுப்பியுள்ளார்.

வழக்கு அடுத்தமாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. [து]

## உலக தரிசனம்

## விசா முறையில் மாற்றம்

[டாக்கா]

இந்தியாவிற்கும் பங்களாதேஷிற்கும் இடையில் புதிய விசா ஒப்பந்தம் கைச்சாத்தானது.

பங்களாதேஷ் வெளியுறவுச் செயலரும் இந்திய உயர்ஸ்தானிகரும் இதில் கைச்சாத்திட்டனர்.

புதிய விசாமுறையால் கடந்த முப்பது ஆண்டுகாலம் படைமுறையிலிருந்த திட்டங்கள் மாற்றப்பட்டுஇலகுவான நதிய முறை கடைப்பிடிக்கப்படுமெனத் தெரிகிறது. (து)

## நூல்கள் விநியோகம்

(கோப்பாய்)

யாழ். வலயத்திற்குட்பட்ட பாடசாலைநூலகங்களுக்கான நூல்கள் அண்மையில், யாழ் வலயக் கலவிப்பணிமனையில் வைத்து வழங்கப்பட்டன.

பாடசாலைகளின் தரத்திற்கேற்ப இந் நூல்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-79)

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலக அபிவிருத்திக்கான ஆலோசனைக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை கண்டி வீதியில் இயங்கும் இடைக்கால நூலக மண்டபத்தில் யாழ். மாநகர மேயர்என்.ரவிராஜ்தலைமையில் நடைபெற்றது. (உ)

## கசிப்பு விற்பனை

(யாழ்ப்பாணம்)

5 ஆம் குறுக்குத் தெருவில் சிறைச்சாலைப் பெண் கைதிகள் விடுதிக்கு அருகாமையில் ஒரு சிலரால் கசிப்பு விற்பனை மிகவும் துணிச்சலான முறையில் இடம்பெற்று வருவதாக அறிய முடிகிறது. (உ-2)

## வருடாந்த மஹோற்சவம்

[யாழ்ப்பாணம்]

இருபாலை வேளாதோப்பு அருள்மிகு ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமிஆலயவருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஒன்பதுதினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் யூன் மாதம் 3ஆம் திகதிஞாயிறுக்கிழமை இரதோற்சவமும, திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (செ)

## தொல் பொருட் சின்னங்கள் கண்டுபிடிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் மேற்குக் கரையோரப் பகுதிகளில் தொல் பொருள் முக்கியத்துவம் வாய்ந்த வடிவமைப்புக்கள் சிலகண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஒன்பது சதுர கிலோமீற்றர் பரப்பளவிற்குப் பரவியுள்ள இவ்வரும்பொருட்கள் 4 ஆயிரம் ஆண்டுக்கு முற்பட்டவை எனக்கூறப்படுகிறது.

மேற்படி தொல் பொருட்கள் ஹரப்பா நகரில் இருந்து மீட்கப்பட்ட பொருட்களை ஒத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்த மன நோயாளி காயம்

(மந்திகை)

சைக்கிளில் சென்றவேளை தவறி வீழ்ந்து காயமடைந்த மன நோயாளி ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை மனநோய்ச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவிட்டு உறவினருடன் சென்று கொண்டிருந்த வேளையிலேயே தவறி வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

வதிரியார் வத்தையைச் சேர்ந்த எஸ்.தருமராசா (வயது56) என்பவரே இவ்வாறு வீழ்ந்து காயமடைந்தவராவார். (உ-23)


## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலங்கை

## மீன்பிடியியல் டிப்ளோமா சற்கை நெறி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்படி கற்கை நெறிக்குப் பதிவு செய்ய விரும்பும்தகுதிவாய்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

### தேவையான தகமைகள்

1. பழைய பாடத்திட்டத்தில் ஒரே தடவையில் க.பொ.த (உ/த) பரீட்சையில் 180 புள்ளிகள் பெற்றுபல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியுடைய சகல மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

அல்லது

புதிய பாடத்திட்டத்தின் கீழ் 2000 ஆகஸ்ட்டில் நடைபெற்ற க.பொ.த [உ/த] பரீட்சையில் மூன்று பாடங்களை எடுத்தோர்,

அ. மூன்று அங்கீகரிக்கப்பட்ட பாடங்களிலும் சித்தி பெற்று 135 ற்குகுறையாத மொத்தத் திரட்டுப் புள்ளிகளைப் பெற்றிருக்கவேண்டும். அத்துடன்,

ஆ. பொது சாதாரண வினாத்தாளில் 30%க்கு குறையாத புள்ளியைப் பெற்றிருக்க வேண்டும்.

2. தேர்வுக்கு-நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

3. கற்கை நெறிக்குரிய கட்டணம் :-

| | | |
|---|---|---|
| பதிவுக் கட்டணம் | ரூபா | 250.00 |
| கற்கை நெறிக்கட்டணம் | ரூபா | 5000.00 |
| பரீட்சைக்கட்டணம் | ரூபா | 750.00 |
| நூலக வைப்பு [மீளப்பெறக்கூடியது] | ரூபா | 500.00 |
| ஆய்வுகூட வைப்பு [மீளப்பெறக்கூடியது] | ரூபா | 500.00 |
| மொத்தம் | ரூபா | 7000·00 |

கட்டணங்கள் முற்பணமாகச்செலுத்தப்படவேண்டும்; காலம். ஒரு வருடம்; உள்வாரி- முழுநேரம்

விண்ணப்பப்படிவங்கள்உதவிப்பதிவாளர்/தேர்வுகளும் அனுமதிகளும் கிளை,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம் என்னும்முகவரியிலிருந்து ரூபா 50/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்கள் இணைப்பாளர் / கடல்வள அபிவிருத்தி நிலையம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம் என்னும்முகவரிக்கு 20/07/ 2001அன்று அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்பட வேண்டும்.

கற்கைநெறி 2001 09.24 அன்று தொடங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டுளளது.

பதிவாளர்
2001.05.22

(C/2020)

முன் மகிழ்தலும் பின் சினத்தலும் இன்றி என்றும் ஒரு தன்மையாக உயர்ந்தோரைத் தழுவி நடத்தலே அறிவாகும்

- குறள்

# வலம்புரி

## நிதானம் அவசியம்

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் அட்டகாசமும், அடாவடித்தனமும அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. வைத்திய சாலையில் நோயாளர்களைப் பார்வையிடச் செல்பவர்களுக்கு கை நீட்டும் அளவில் நிலைமை முற்றி விட்டது.

வைத்திய சாலையில் தாயோ, தந்தையோ, பிள்ளையோ நோய்முற்றி அனுமதிக்கப்பட்டிருக்கும் போது உரியவனின் மன நிலை எப்படியிருக்கும் என்பதை ஒரு கணம் சிந்தித்தால் கை நீட்டும் அளவிற்கு போக வேண்டிய தேவை ஏற்படாது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களைப் பார்வையிட வருபவர்கள் பொழுது போக்கிற்காக அங்கு வருவதில்லை. இதனைப் பாதுகாப்பு ஊழியர்கள் உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

அதே நேரம் நோயாளர்களைப் பார்வையிட வருபவர்களும் குறிப்பிட்ட நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் பார்வையிடச் சென்றால் பாதுகாப்பு ஊழியர்கள் தமது கடமையைச் செவ்வனே செய்வது மிகவும் கடினம் என்பதும் மறுக்கமுடியாத உண்மை.

ஆனால் நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள் ஏதோ ஒரு வகையில் துன்பத்தைச் சுமந்து வருகிறார்கள் என்பது பாதுகாப்பு ஊழியர்கள் மட்டுமல்ல வைத்திய சாலையில் கடமையாற்றும் அனைத்து ஊழியர்களாலும் நித்தமும் நினைவுபடுத்த வேண்டிய தொன்றாகும்.

நோயாளர்களைப் பார்வையிட வருபவர்களை அன்புடன் ஆற்றுப்படுத்த வேண்டியவர்கள், ஆலோசனை கூறவேண்டியவர்கள், வழிகாட்ட வேண்டியவர்கள்கன்னாபின்னா என்று கதைத்தால்வந்த, பார்வையாளரும் என்ன மனித வாழ்க்கை என்று ஒரு கணம் நினைத்தால் நோயாளிஉயிர் தட்ப பாதுகாப்புஊழியர் பரலோகம் போகவேண்டியும் வரலாம்.

யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு ஊழியர்களில் நல்லவர்கள் பலர்கடமையாற்றுகிறார்கள் என்பது உண்மையாயினும் ஒரு சிலரின் பொறுமையிழப்பு எல்லோரையும் பாதிக்கவே செய்கிறது.

# சைவசமய விவகாரக் குழுவின் நிர்வாகத்தில் தலையிடும் அதிகாரம் யாழ். முதல்வருக்கு இல்லை

(2)

(நேற்றைய தொடர்ச்சி)

### முதல்வர்சிவபாலனின் கவிதை வெளிவந்தது.

சமயத்திற்கும் அரசியலுக்கும் எவ்வகையிலும் கலப்பு ஏற்படக் கூடாது என்பதில் சைவசமய விவகாரக்குழு மிகவும் உறுதியாக இருந்தது. சைவ சமய விவகாரக் குழு சமயப் பணிகளுடன் தனது செயற்பாட்டை நிறுத்திக் கொள்ள வேண்டுமேயொழிய அரசியல் வாதிகளுக்கு மேடை அமைத்துக் கொடுக்கக் கூடாது என்பது குழுவின் முடிந்தமுடிவாகும்.

குழுவின் இம்முடிவை பொ. சிவபாலன் மனதார ஏற்றுக் கொண்டார். அது மட்டுமன்றி ஆசியுரை வழங்கும் தகுதி சமயப் பெரியார்களுக்குமட்டுமே உண்டு, ஏனையோர் வழங்குவது வாழ்த்துச் செய்தி என்ற விளக்கம் எல்லாம் முதல்வர் சிவபாலனுக்கு நன்றாக விளங்கியிருந்தது.

நல்லைக்குமரன் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதை முதல்வர் சிவபாலன் விரும்பவில்லை.

மாறாக பொன் சிவபாலன் என்ற பெயரில் முருகனைப்புகழ்ந்து பாடும் கவிதை யொன்றை மலருக்கு அனுப்பியிருந்தார்.

அனுப்பப்படும் ஆக்கங்கள் முருகனின்புகழைபேசுவதாக இருந்தால் அதையார் அனுப்பினார் என்றகேள்விஇருக்கக் கூடாதென்பது பதிப்பாசிரியரின் கொள்கை. அதனால் பொன்சிவபாலன் என்றபெயரில்அக்கவிதை பிரசுரிக்கப் பட்டது.

அதுமுதல்வர்சிவபாலனுக்கும் பெரும் மகிழ்ச்சியைக்கொடுத்திருந்தது. ஆனால்முதல்வர்களில்எவரின் ஆக்கங்களும் நல்லைக் குமரனில் இடம் பெறவில்லை என்ற தற்போதைய முதல்வர் ரவிராஜின் கூற்று மிகுந்த வேதனையை தருவதுடன் ஆவணமாக - சான்றாக இருக்கும் நல்லைக்குமரன்மலரையே மறைப்புச் செய்து முதல்வர்களின்ஆக்கம்எதுவும் இடம் பெறவில்லை என்பது அரசியலின் பொய்க்கலாச்சாரம்புனிதமான ஆன்மீகத்திற்குள்ளும் புகுந்துவிட்டதென்பதையே சுட்டி நிற்கிறது.

### மலர் வெளியீட்டில் சிவபாலன் கலந்து கொண்டார்.

நல்லைக்குமரன் மலரின் 7 வது வெளியீட்டில் முதல்வர் சிவபாலன் அவர்கள் கலந்து கொண்டார். எனினும் அவர் நீண்ட நேரம் அன்நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை அதற்கும் காரணம் இருந்தது.

முதல்வர் சிவபாலன் நல்லைக்குமரன்மலரின்வெளியீட்டில் கலந்து கொண்டபோது அவருடன் தற்போதையபிரதி முதல்வர்கந்தையனும் கலந்து கொண்டார்.

நல்லைக்குமரன் மலர்எந்த விதமான அரசியல் கலப்பற்று

# குருஷேத்திரம்

வெளிவர வேண்டுமென்பதை முதல்வர் சிவபாலன் நியாயமானதாக ஏற்றுக் கொண்டதாலேயே மலருக்கு ஆக்கமும் ஊக்கமும்வழங்குகினார். இதனைப் புரியாத தற்போதைய முதல்வர் எழுந்தமானமாக சைவசமய விவகாரக் குழுவை கலைப்பதாகக் கூறினார் எனில் தந்தை செல்வாவின் வழியில் வந்த தமிழர்விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவரா இவ்வாறு நடந்து கொண்டார் என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழவே செய்யும்.

### இராமகிருஷ்ண மிசன் குழுவினர் விஜயம்

1999ம் ஆண்டு இந்திய, இலங்கை இராமகிருஷ்ணாலயத்தைச் சேர்ந்த சுவாமிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தனர். அவர்களுக்கு யாழ் மாநகரசபையால் வரவேற்பு நிகழ்வு நடந்தது.

இந் நிகழ்வுக்கு மாநகர முதல்வர் சிவபாலனே தலைமைதாங்கினார்

வருகைதந்த சுவாமிகளிடம் ஆசிபெற்று நிகழ்வையடுத்து சிவத்தமிழ் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு முதல்வரினல் பட்டம்வழங்கிக் கௌரவிக்கப் பட்டது இந்நிகழ்வின் இறுதியில் இராமகிருஷ்ணாலய சுவாமிகளுக்கும் அவர்களுடன் வந்தவர்களுக்கும் நல்லைக்குமரன்மலர் முதல்வர்சிவபாலனால் வழங்கப் பட்டது. அப்போதுமுதல்வர் சுவாமிகளிடம் நல்லைக்குமரன்மலர் யாழ்ப்பாணத்தின் சமயப்பணிகளில் ஒன்று இம் மலர் எவ்வகையிலும் அரசியல் தொடர்புடையதல்ல காஞ்சிப் பெரியவரின் ஆசியுடன் வெளிவந்துள்ளது என்றுகூறினார். அவ்வுரையின் பெருந்தன்மையை எண்ணும்போது இப்போதும் கண்களின்ஓரங்கள் ஈரமாகவே செய்கிறது

அவ்வாறு முதல்வர்சிவபாலனால் மதிக்கப்பட்ட சைவசமய விவகாரக்குழுவும் நல்லைக்குமரன்மலரும் இன்று முதல்வர் ரவிராஜினால் கலைக்கப்பட்டது என்பதை எண்ணும்போது மனிதர்களின் வேறுபடும் வித்தியாசமான மனநிலையும் புலப்படவே செய்கிறது.

[நாளை தொடரும்]

★ விதுரன் ★

# சட்டவிரோத கைதுகள் தொல்லைகள் மீதான ஜனாதிபதிக்குழு செயற்பாட்டுத் திட்டங்கள்

சட்டவிரோதமான கைதுகள் தொல்லைகள் மீதான ஜனாதிபதி ஆணைக் குழு முதலில் 1998 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடியை தலைவராகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது. இக்குழு இலங்கை விவகார நல்லிணக்க அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்தது.

முப்படைகளின் தலைவரான ஜனாதிபதியினால் இக் குழு ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம்; பலவழிகளிலும் தமிழ் மக்கள் முக்கியமாக படையினரினால் கைது செய்தல், சித்திரவதை செய்தல், தடுத்து வைத்தல் போன்ற துன்புறுத்தலுக்குள்ளாக்கப்படுகின்றனர். இதனால் இந்த சட்ட விரோதமான கைதுகள், தொல்லைகள் மீதான குழுவிற்கு உள்ள அதிகாரங்கள் என்ன எனப் பார்க்கும் போது இக் குழுவானது எந்தப்படைகளின் தலைவர்களையோ அல்லது அதிகாரிகளையோ, பொலிஸ் அதிபரையோ அல்லது உதவி பொலிஸ் அதிபர்களையோ சட்டவிரோதமான கைதுகள் தொடர்பாக விசாரணைக்குட்படுத்தலாம். சந்தேகத்திற்கிடமாக கைது செய்யும் போதும் மனிதாபிமானமாக நடத்தப்பட வேண்டும் எனும் கொள்கைக்கிணங்க படை ஊழியர்கள், பொலிஸ் அலுவலர்கள் தவறுமிடத்து கேட்கும் அதிகாரம் இக்குழுவிற்கு உண்டு

### இக் குழுவின் தற்போதைய நிலை

தற்போது 2001 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் சட்ட விரோத கைதுகள் மற்றும் தொல்லைகள் மீதான ஜனாதிபதிக் குழுவிற்கு கௌரவ நீதி அமைச்சர் பட்டி வீரக்கோனைத் தலைவராகக் கொண்டதும் மற்றும் கௌரவ ஜி எல். பீரிஸ் நிதி அரசியல் விவகார அமைச்சர், கௌரவ லக்ஷ்மன் கதிர்காமர் வெளிநாட்டு அமைச்சர், கௌரவ அமைச்சர் எஸ். பி. திசநாயக்கா, கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகிய அமைச்சர்களையும், கௌரவ உதவி அமைச்சர் சோமசுந்தரம்கணேசமூர்த்தி. யையும் மற்றும் முன்னாள் பாராளுமன்ற அங்கத்தவர்களான ஆர். சம்பந்தன், டி. சித்தார்த்தன் ஆர். யோகராஜன், ஜனாப் எம். எம். சுஹைர், லக்ஷ்மன் ஜெயக்கொடி என் போரையும் அங்கத்தவர்களாகக் கொண்டு இயங்குகின்றது.

தொல்லை தவிர்ப்புக் குழு எனக் கூறப்படும சட்ட விரோத கைதுகள் தொல்லைகள் மீதான ஜனாதிபதிக் குழு என்ன செய்கின்றது. ஒருவர் இராணுவம், கடற்படை, விமானப்படை அல்லது பொலிஸ் அலுவலரால் கைது செய்யப்படும் போது அக் கைது செய்யப்பட்டவர் மனிதாபிமானமாக நடத்தப்படுகின்றாரா எனவும், அவரின் கைதும் தடுத்து வைப்பும நியாயமானதா என்றும் குழு விசாரணை செய்கின்றது இவ்வாறாக தவறாக கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்படும் ஒருவர் விடயத்தில் மேற்படி குழு கைது செய்க அதிகாரியையும், கைது செய்து தடுத்து வைக்கப்படும் சட்டத்தின் தன்மையையும் பரிசீலித்து மனிதாபிமானமாக நடத்தப்படுகின்றாரா என்பதனை ஆராயும். முக்கியமாக குழு பின்வரும் விடயங்களைக் கவனத்தில் எடுக்கும்.

01 கைது செய்யும் அதிகாரி அலுவலர் தான் யார்? என்பதனை கைது செய்பவருக்கோ இல்லையேல் கைது செய்பவரின்

(தொடரும்)

**வேலுப்பிள்ளை பொன்னம்பலம்**
சட்டத்தரணி
செயலாளர்
சட்டவிரோத கைதுகள், தொல்லைகள் மீதான ஜனாதிபதிக் குழு

# சாயி அருளமுதம்



பிரேமையினால் மனம் சுத்திகரிக்கப்பட்டு, அகங்காரத்திலிருந்து பிறக்கும் பொறாமைதுவேஷம்ஆகியவற்றைத்தவிர்க்கும் போதுதான் மாயையை உணர்ந்து அதை வெளியேற்ற முடியும் அன்பு இல்லாமற் செய்யப்படும், எந்தக் கருமமும் பாராட்டுதலுக்குரியதன்று வருடாவருடம் இங்கு வருபவர்களில் பலர் - உண்மையில் ஆயிரக்கணக்கானோர் பஜனைகளில் பங்கு பற்றி, பிரசங்கங்கள், சொற்பொழிவுகள் ஆகியவற்றைச் செவிமடுத்து. இங்கு தங்கியிருந்து செல்கின்றனர்: ஆயினும் அவர்கள் முதலில் வரும்போது எந்த நிலையிலிருந்தனரோ அதே நிலையிலேயே இருக்கின்றனர்: பாவம் இல்லாத நாமஸ்மரணம் குறிப்பிட்ட இலக்கைச் சென்றடைதலரிது. பய பக்தியுடனும், வியப்புடனும் அடக்கத்துடனும், வணக்கத்துடனும் இறைவனின் நாமம் உச்சரிக்கப்படவேண்டும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# விடுதலைப்புலிகள் மீதான தடையை அரசாங்கம் நீக்கமாட்டாது

## பட்டிவிரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகள் மீதானதடையை அரசாங்கம் நீக்கமாட்டாதென்று நீதியமச்சர் பட்டிவீரக்கோன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மீதான தடைநீக்கம் பற்றி அரசுதீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் தடைநீக்கப்பட்டுபேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாகவும் வெளியான செய்திகளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர்பட்டிவீரக்கோன் மேற்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் விடுதலைப்புலிகளினால் பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனையாக விதிக்கப்பட்டுள்ள மூன்று விடயங்களில் அவ்வமைப்பின் மீதான தடைநீக்கம்பற்றி இப்போதுள்ள சூழ்நிலையில் ஆராய முடியாது.

ஆனால்அவர்களின் ஏனைய கோரிக்கைகளான வன்னிக்கான பொருளாதாரத் தடை நீக்கம் மற்றும்காலவரையறையற்ற யுத்தநிறுத்தம் ஆகிய விடயங்கள் பற்றி விடுதலைப்புலிகளுடன் பேசி ஒருஇணக்கப்பாட்டுக்கு அரசாங்கம் வருவதற்கு முயற்சி செய்யும் என்றார்.

பொருளாதாரத்தடை நீக்கம் போர் நிறுத்தம்பற்றி அரசும் விடுதலைப் புலிகளும் பேசிஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தபின்னர் இருதரப்புக்குமிடையே பேச்சுவார்த்தைகள்நடைபெறும் போது ஒரு கட்டத்துக்குப் பின்னர் அவர்கள் மீதானதடையை நீக்குவது பற்றி ஆராயமுடியுமென்றும் அமைச்சர்மேலும் தெரிவித்தார். (இ)

### தூதுவர்

காந்தியைச் சந்தித்து பேசியையிருந்தார்

இபேச்சுக்களின் போது இடம்பெற்ற விடயங்கள் குறித்து புலிகள் இபக்கம் மீதான தடை நீக்கம்பற்றிய இலங்கையில் அரசு விடுதலை புலிகளுக்கிடையில்சமாதானப் பேச்சுக் குறித்தும் ஆராயவே தூதுவர் கோபலகிஸ்னகாந்தி அழைக்கப்பட்டுள்ளாரென தெரிவிக்கப்படுகிறது. (இ)

### திருமலையில்

துடன் 19 பேர் கொல்லப்பட்டும் 14 பேர் காயமடைந்துமுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது அப்பகுதிக்கு விரைந்த படையினர் சடலங்களை அப்புறப்படுத்தியதுடன் காயமடைந்தவர்களை கந்தளாய் மற்றும் திருமலை வைத்தியசாலைகளில் அனுமதித்தனர்.

கண்ணிவெடிச்சம்பவத்தை அடுத்து அப்பகுதிக்கு வந்த படையினர் சரமாரியான வேட்டுக்களைத்தீர்த்தனர்.

இதன்போது எவருக்கும் காயங்களோ சேதங்களோ ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த படையினர் அநுராதபுரம் மற்றும் குருநாகல் ஆஸ்பத்திரிக்கும் மாற்றப்பட்டனர்.

இச்சம்பவத்தின் போது கண்ணிவெடித் தாக்குதலும் கிளைமோர்த் தாக்குதலும் ஒரேசமயத்தில் இடம் பெற்றதாக பக்கச்சார்பற்ற செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

இதனை அடுத்து சுமார் அரைமணி நேரம் போக்குவரத்து துண்டிக்கப் பட்டிருந்தது. சடலங்களும் காயமடைந்தவர்களும் அப்புறப் படுத்தப்பட்ட பின் போக்குவரத்துக்காகப்பாதை திறந்து விடப்பட்டது. (வ)

## சுரேசை நாடுகடத்தும் தீர்ப்பு ஒத்திவைப்பு

(ஒட்டாவா)
இலங்கையைச் சேர்ந்த மாணிக்கவாசகம் சுரேஷ்என்பவரை கனடாவில் இருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பும் தீர்ப்பை கனடா உயர் நீதிமன்றம் மீண்டும் ஒத்திவைத்துள்ளது.

ஒட்டவாவில் உள்ளஉயர் நீதிமன்றில் ஒன்பதுநீதியரசர்கள் இந்தவழக்கைவிசாரணை செய்துள்ளனர்.

மணிக்கவாசகம்சுரேஷ்சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் அவர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் இலங்கையில் கடும்சித்திரவதைக்குள்ளாக்கப் படுவார் என்று வாதாடினார்கள்இதே நேரம் மாணிக்க வாசகம் சுரேசை இலங்கைஅரசு சித்திரவதைசெய்யாது என்று அரசதரப்பு சட்டத்தரணிகள்தெரிவித்தனர்.

மாணிக்கவாசகம் சுரேஷ் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்தார் என்றும் இவர்உலகத் தமிழர்இயக்கம், கனேடியதமிழர்இயக்கம் போன்ற அமைப்புகளுடன் தொடர்புடையவர் என்றும் குற்றம் சாட்டப் பட்டிருந்தார்.

இதேவேளை இவ் வழக்கில் தீர்ப்பு வழங்குவதற்கு பல மாதங்கள் செல்லுமென "நாஷனர் போஸ்ற்" என்னும் பத்திரிகை தெரிவித்துள்ளமைகுறிப்பிடத்தக்கது. (ம)


**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
**எம். ஜி. ஆர், சரோஜாதேவி நம்பியார் நடித்த**
**எங்கவீட்டுப் பிள்ளை**
11-00, 2-30 பு: நே:
சனி ஞாயிறு பி. ப 6 மணி
(ரீல்ஸ்) (கி-2021)


## யாழ் வைத்தியசாலை பணிப்பாளரிடம் ராஜினாமாவை கை விடுமாறு டாக்டர்கள் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]
யாழ்.போதனா வைத்தியசாலை-பணிப்பாளர்டாக்டர் (செல்வி) நவமலர் கனகரட்ணம் இம்மாதம் 31ந் திகதியுடன் தனது பதவியை இராஜிநாமாச்செய்வதாக அறிவித்துள்ளசெய்தி நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை பணிப்பாளர் பதவியை இராஜினாமாச் செய்யவேண்டாமென வைத்தியசாலைடாக்டர்களும், ஊழியர்களும், டாக்டர் நவமலர் கனகரத்தினத்திடம் வேண்டுகோள்விடுத்துள்ளனர் (ந)

### ராவய

இது வென்று தெரிவித்துள்ளார்.

மேற்படிபத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் அண்மையில் வழங்கப்பட்ட சிறந்த பத்திரிகையாளர் விருதைப் பெற்றவர். அத்துடன் ஆங்கிலப்பத்திரிகைகளில் அரசிற் கெதிரான கட்டுரைகள் எழுதுபவர் என்பதும்இங்குகுறிப்பிடத்தக்கது

இதேவேளை பிரதமநீதியரசருக்கு எதிராக ஐக்கியதேசிய தேசியக்கட்சி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பிரதியை கடந்தவாரம் ராவய செய்தியில் பிரசுரித் திருந்தமையும் இங்குகுறிப்பிடத்தக்கது. (இ)

### குடும்பநல

பற்றினர். கூட்டத்தில்குடும்பநல சேவையாளர்களின் கடந்தகால சம்பளங்களை முழுமையாக வழங்குவதையும்மேற்பார்வை விடயத்தில் அவர்களின் நிபந்தனையை ஏற்றுக் கொள்வதெனவும் தீர் மானிக்கப்பட்டது.

இதேவேளை இதற்குமுன்னதாக தற்போது யாழ் மாநகரத்தில் ஏற்பட்டுள்ள சுகாதாரப்பின்னடைவைநிவர்த்தி செய்து மக்களுக்கு வேண்டிய சுகாதார சேவையை உடன் கவழங்குமாறு வைத்தியலாநிதி இ. தெய்வேந்திரன்குடும்பநல சேவையாளர்களைக் கேட்டுக் கொண்டதையடுத்தே இவர்கள் மீண்டும் கடமைக்குத்திரும்புவதென முடிவு செய்தனர் இவர்களது வழமையான சேவை எதிர்வரும் திங்கட் கிழமைமுதல் மீண்டும் ஆரம்பமாகும். (ந)

### முக்கிய

செல்வதற்கான வழிவகைகளும், புலிகள்மீதான தடையைநீக்குவது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாகவும் அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## தொல்லை தவிர்புகுழு குற்றச்சாட்டு

பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினரும், நாசகார ஒழிப்புப்பிரிவினரும் தொல்லை தவிர்ப்புக் குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளுக்குப் பதிலளிப்பதில்லை என்று தொல்லை தவிர்ப்புக் குழுவால் குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

இந்நிலையில் அடுத்த வாரம் பயங்கரவாத ஒழிப்பு பிரிவினரையும், நாசகார ஒழிப்புப் பிரிவினரையும் நீதிமன்றத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்குமாறு இக்குழு கோரியுள்ளது.

தொல்லை தவிர்ப்புக் குழு அமைச்சர் பட்டிவீரக்கோன் தலைமையில் கூடியபோதே இவ்வாறு கோரிக்கை விடப் பட்டுள்ளது. (வ)

## தடைநீக்கம்பற்றி இரு நாளில் தெரியும்

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதனால் ஏற்படக்கூடிய சாதக பாதக நிலைமைகள் பற்றி அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பெண்டி உட்பட முக்கிய அரச உயர் பீடத்தவர்கள் கூடி ஆராய்ந்ததாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ் அமைப்பின் மீதான தடையை தற்காலிகமாக நீக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளதாகவும், தடையை நீக்குவதற்குரிய அழுத்தம் மேற்கு நாடுகளால் இலங்கை அரசுக்கு தொடர்ந்து விடுக்கப் பட்டுவருவதாகவும் தெரிய வருகிறது.

இதே வேளை அடுத்த 48 மணி நேரத்தில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் பற்றிய அறுவித்தலொன்று வெளியிடப்படலாமென்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ)


JAFFNA TECHNICAL INSTITUTE ★ SRILANKA ★ JTI

**English Classes**

★ General English with Grammar
★ External Degree
★ Internal Degree
★ G. C. E. A/L

**Jaffna Technical Institute**
264/1, Stanley Road. Jaffna.
(C/2024) T. P 021 - 3335


## "தியாகிகள் தின" நிதியுதவிகோரி எவரையும் வற்புறுத்தவில்லை

### ஈ. பி. ஆர். எல். எவ் சுரேஸ்அணி அறிக்கை

(யாழ்ப்பாணம்)
ஈ. பி. ஆர். எல். எவ். 1993ம் ஆண்டிலிருந்துஅமைப்பின் ஸ்தாபகர் பத்மநாபா மற்றும்அவருடன்இணைத்துக் கொலை செய்யப்பட்ட பன்னிரு தோழர்களின் நினைவு தினத்தை தியாகிகள் தினமாக அனுஷ்டித்து வருகிறது. இந்த வகையில் இம்முறையும் இத்தினத்தை மன்னாரில் சிறப்பாகநடத்த ஏற்பாடு செய்துள்ளோம். இதற்கு நிதியுதவி கோரி சேகரித்து வருகிறோம். இதற்காக நாம் யாரையும்வற்புறுத்தவில்லை. இதனைத் தவறென எமது அமைப்பின் பிறிதொரு பிரிவினரான வரதரணியினர் குற்றம் சாட்டியிருப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு ஈ. பி. ஆர். எல் எவ்வின் சுரேஸ் அணியினர் நேற்று வெளியிட்ட அறிக்கை மூலம் காட்டியுள்ளனர்.

அவ்வறிக்கையில் மேலும்தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

நாம் நிதி சேகரிப்பில் ஈடுபடும்போது எவரையாவது வற்புறுத்தியிருந்தால் சம்மந்தப் பட்டவர்கள் அதனை வெளிச்சமாகக் கூறலாம். அல்லது தகுந்தவர்களிடம் முறையிடலாம்.

1990ம் ஆண்டு எமது கட்சியின் செயலாளராக சுரேஸ் பிறேமச்சந்திரன் பொறுப்பேற்றதிலிருந்து மிகவும் பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றோம். (இ)


தங்க நகையுலகில் தமக்கெனத் தனியிடம் பிடித்தவர்கள்

**வினோ நகைப் பூங்கா**

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், T. P, FaX 2824. (கி/2022)


இப்பத்திரிகை "வலம்புரி" அச்சக ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மே மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.